# கல்கி பிறந்தார்



RESENTED BY:
V. PR. PL.
KASIVISWANAT
PAGAN
3357
3357

இராஜ அரியரத்தினம்

பாரதி பதிப்பகம்

ACC 7DD
00128

# கல்கி பிறந்தார்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

**இராஜ. அரியரத்தினம்**

ஆசிரியர் : ஈழகேசரி

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

YOUNG MEN CHETTIAR MUTUAL ASSOCIATION, PAGANERI.

3357

பாரதி பதிப்பகம்

தியாகராய நகரம் சென்னை-17.

முதற்பதிப்பு செப்டம்பர் 1955

0-12-0

விலை ரூ. ~~1-0-0~~

எவரெடி அச்சகம், சென்னை–17.

# ஒரு திருப்தி

"நம்மில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏற்பட்ட கடமையை உணர்ந்து அதை நன்கு நிறைவேற்ற முயல்வோமானல், அதில் மனதிற்கு உண்டாகும் திருப்தியும் நிம்மதியும் வேறெதிலும் ஏற்படுவதில்லை." —கல்கி.

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என நினைப்பதுதானும் மதிப்பாகாதெனத் தமிழ் மக்கள் கருதிய காலத்திற் கல்கி பிறந்தார்! மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லையெனப் பலரும் சொல்லிய தமிழைக் கல்கி கட்டி யணைத்து உலகறியச் செய்யும் பணியில் அயராதுழைத்தார்.

தமிழ்நாடு வளமிகுநாடு. இத் திருநாட்டிலே தமிழ் வளர்ந்தது; கலை வளர்ந்தது; இசை வளர்ந்தது; தேசபக்தி வளர்ந்தது; இறைபக்தியும் இணைந்து வளர்ந்தது. இவற்றுக் கெல்லாம் பேரரணாகத் தமிழ் மன்னர்கள் திகழ்ந்தார்கள்.

தமிழ் மன்னர்களைப் போலவே தேனூர்தமிழையும் சீர்மிகு கலைகளையும் பேணி வளர்த்தார் பேனு மன்னராகிய கல்கி. இம்மன்னர் எங்களுடன் இனிக்க இனிக்கப்பேசி மகிழ்ந்து வந்தவர். அன்றொரு நாள் சொல்லாமற் கொள்ளாமற் கலை வாணியுடன் ஒன்றி விட்டார்.

இது நாம் அறிந்த உண்மை!

இந்த உண்மையைப் பொய்யாக்கிக் கல்கி பிறந்தார்!

அவர் இன்னும் உயிருடன் இருக்கின்ருர்! என்பதை நிலை நாட்ட எழுந்ததே இம்முயற்சி.

தமிழ் மக்களின் ஆரா அன்புக்கும் மதிப்புக்குமுரிய எனது நண்பரும் செந்தமிழ்ச் செல்வருமான கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமிழ் அன்னையை அரியாசன மேற்றி வைத்த பேராசிரியர்களுள் ஒருவர். கதைவளமுங் கலைவளமும் நிறைந்த அரிய தமிழ் நூல்களை அவர் எங்களுக்குத் தந்துள்ளார். இந்நூல்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாக, ஓர் ஆற்றுப் படையாக, இச்சிறு நூல் அமைந்திருக்கின்ற தென்பது எனது தாழ்மையான கருத்து.

இந்நூலைக் கையிலெடுத்து வாசிப்பவர்கள் கல்கியின் எழுத்துக்களை எவ்வளவு சாமர்த்தியமாகக் களவாண் டிருக்கிறேன் என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்து கொள்வார்கள். அப்படி அவர்கள் உணராத விடத்து எனது முயற்சி படு தோல்வியாகும் !!

கல்கியின் அமர இலக்கியங்களை அவர் கண்டு களிக்கும் வகையில் அழகாக வெளியிட்ட பெருமை பாரதி பதிப்பகத்தாருக்கு முண்டு. அவர்களே இந்நூலையும் வெளியிட்டுக் கல்கித் தமிழைப் பரப்புவது மிகவும் பொருத்தமானதே.

**கல்கி பிறந்தார்,** கவினுறு நூலாக அமைவதற்கு உற்சாக மூட்டிய எனது அன்பரும் தமிழ்ச்செல்வருமான சின்ன அண்ணுமலை அவர்களுக்கும், பாரதி பதிப்பக நிர்வாகி தமிழ் அன்பர் பழ. சிதம்பரனுர் அவர்களுக்கும் தமிழ் கூறும் நல்லுலகின் நன்றி உரியதாகும்.

இந்த இடத்திற் பேராசிரியர் கல்கி எழுதியிருப்பதையே நானும் எழுத விரும்புகிறேன். " தமிழ்த் தாய்க்குச் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டும் என்ற ஆசையுடன் **பாரதி பதிப்பகத்தார்** முன் வந்திருக்கிறுர்கள். நல்ல

முறையில் அழகிய தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழ்த் தாயின் பாதங்களில் சூட்டுவதற்கு ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். இந்த அரிய நோக்கத்தில் நிலைத்து நின்று பணிபுரியும் ஆற்றலை அவர்களுக்கு அருளவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.''

தமிழ் மக்களின் உள்ளங்களைக் கொண்ட கல்கிக்கு ஈழமணித் திருநாட்டிற் பெருமதிப்புண்டு. ''யாழ்ப்பாணத்தில் நான் கண்ட உள்ளன்பை இதற்குமுன் வேறு எங்குமே கண்டதில்லை. ஒருவேளை என்னுடைய முற்பிறப்பில் நான் யாழ்ப்பாணத்தானா யிருந்திருக்க வேண்டும்.'' இவ்வாறு கல்கி ஆசிரியரே எழுதி யிருக்கின்றார். ஆகவே, ஈழத்துப் பத்திரிகை ஆசிரியன் ஒருவன் கல்கி ஆசிரியரைப் பற்றிக் கல்கித் தமிழில் எழுதித் **திருப்தி** அடைவதில் ஆச்சரியம் எதுவுமில்லையே!

வாசகரே! நீர் என்ன சொல்லுகின்றீர்?

**இராஜ அரியரத்தினம்.**

'கலாநிதி'
சாவகச்சேரி
இலங்கை 21-9-54.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION
PAGANERI.

கன்னித் தமிழைக் கண்ணின் மணிபோற்
கருதி வளர்த்துத் தந்த பிரான்

மன்னு மிமய மீழம் வரையு
மக்கள் மதிக்க வாழ்ந்த மகான்

முன்னைப் பொருட்கு முதற் பொருளாம்
மூவா இளமைத் தமி ழணங்கைக்

கன்னற் பாகாய்க் கலை விருந்தாய்க்
கல்கி தந்தான் கவினுறவே.

---இ. அ.

# கல்கி பிறந்தார்

“ வெகு நாளைக்குப் பிறகு ஸ்ரீமான் பொதுஜனம் நேற்று விகடன் காரியாலயத்துக்கு வந்தார். ஆனால் இந்த ஒரு தடவை அவர் வந்தது நூறு தடவைக்குக் காணும் போலிருந்தது. அவ்வளவு அமர்க்களமாய்ப் பேச்சு நடந்தது.

“ விகடரே ! உண்டு அல்லது இல்லை — இந்த இரண்டில் ஒன்று எனக்குத் தெரிந்துபோய் விடவேண்டும். சுத்த மோசடி வியாபாரமாய் இருக்கிறது. நம்மை என்ன வெறும் இளிச்சவாயர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்களா ?” என்றார்.

மேலே பேச்சுத் தடிப்பதற்கு முன்னால், “ எதைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்று சொல்லிவிட்டால் தேவலை,” என்றான் விகடன்.

“ எதைப்பற்றியோ ? எல்லாம் அந்த வரப் போகிற உலக யுத்தத்தைப்பற்றித்தான். இந்த ஐரோப்பிய சர்வாதிகாரிகளையும், இராஜ தந்திரிகளையும் போன்ற கையாலாகாதவர்களை நான் பார்த்ததேயில்லை. எவ்வளவு ஹிட்லர்களும், எவ்வளவு முஸோலினிகளும் இருந்துதான் என்ன ?

எத்தனை நாளாய் உலக யுத்தம் இதோ வந்துவிட்டது, அதோ வந்துவிட்டது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்? ஆசை காட்டி மோசம் செய்யும் வியாபாரமாக அல்லவா இருக்கிறது? சுத்த வெட்கக்கேடு! உம்முடைய அபிப்பிராயந்தான் என்ன?'' என்று சொல்லி, பொதுஜனம் மூச்சுவிட்டார்.

* * *

இது என்ன? கட்டுரை ஆசிரியர் சுத்த மோசமாக இருக்கின்றாரே என வாசகர்கள் மூக்கு நுனியில் விரல் வைத்து மூளையை உடைத்து மூர்ச்சை யடைய வேண்டிய தில்லை.

உலக யுத்தமே ஏற்படக்கூடாதென்ற ஆசை காரண மாக ஐக்கிய நாடுகள் சங்கத்தின் செயலாளர் திரு. டாக் ஆமர்சீல்ட், பாரிஸ் நகரத்திலிருந்து பீக்கிங் நகரத்துக்குப் பறந்து செல்லும் வழியிற் சரித்திரங்கண்ட புது டில்லியிற் சிலமணி நேரம் தங்கி உலக மகா புருடராகிய நேருஜியுடன் சென்ற ஞாயிற்றுக்கிழமை கலந்தாலோசித்திருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சங்கத்தில் மக்கள் சீனத்துக்கு இடமளியா திருப்பது எவ்வளவு முட்டாள்தனமான செயல் என்பது அமெரிக்காவின் மண்டையில் இன்னும் ஏறவில்லை. ஆனாற் சீன அரசாங்கத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க விமானிகளைப்பற்றி அமெரிக்காவின் கவலை இம்மட்டு அம்மட்டன்று.

இப்படியெல்லாம் எழுதிக்கொண்டு போனால் உலக யுத்தமே ஆரம்பித்துவிடக்கூடும். "அணுக்குண்டுகளை ஆழ்கடலில் எறிந்து விடுக!'' என்று இராஜாஜி அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் உபதேசித்திருப்பதால் ஒரு

வேளை உலக யுத்தம் என்ற பேச்சுக்கே இனி இடமில்லாமல் அமெரிக்கா நடந்து கொள்ளவுங்கூடும். இப்படி நடந்து கொள்ளக்கூடிய அறநெறி அமெரிக்காவுக்கு உண்டென இராஜாஜி நம்புகின்றார். அவருடைய நம்பிக்கையைப் பெற்று உலகின் முழு ஆதரவைத் தன் பக்கம் திரட்டிவிட அமெரிக்கா முயற்சி செய்யவுங் கூடும்......?

இதோ ! சுற்றி வளையாமல் இனிக் காரியத்தில் நேரடியாக இறங்கிவிடுகின்றேன். இங்கு ஆரம்பத்தில் நீங்கள் சந்தித்த 'ஸ்ரீமான் பொதுஜனம்' அவர்கள் கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சிருஷ்டி. 1936 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 'ஆனந்த விகடன்' இதழ்களில் ஒன்றையெடுத்துத் தூசி துடைத்துத் தட்டிப்பார்த்தால் ஸ்ரீமான் பொதுஜனம் அவர்கள் 'விகடன்' காரியாலயத்துக்குள் நுழைவதைச் சொந்தக் கண்களாற் காண்பீர்கள். இப்படிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஸ்ரீமான் பொதுஜனம் கல்கி ஆசிரியரிடம் சென்று தனது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வது உலகறிந்த விஷயம். உலக யுத்தம் என்றாலும் சரி, அகில இந்தியக் காங்கிரஸின் நிர்வாக சபைத்தீர்மானம் என்றாலுஞ்சரி, தீரர் சத்தியமூர்த்தியை மக்கள் ஆதரித்தேயாகவேண்டுமென்றாலும் சரி, ஐரோப்பாவிற் பிரமாத நெருக்கடி ஏற்பட்டுவிட்டாலும் சரி, மாஜி காங்கிரஸ் அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் காங்கிரஸிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார் என்றாலுஞ் சரி, ஹிந்தி ஒழியவேண்டுமென்றாலும் சரி, சங்கீதமா சாகித்தியமா என்ற சங்கடமானாலும் சரி, தமிழிசையா, சோஷலிஸமா என்றாலும் சரி எதைப்பற்றிய சிக்கல்களையும் திருவாளர் பொதுஜனத்துக்குக் கல்கி ஆசிரியர் இலகுவான தமிழில் மிக இலாகவமாக விளக்கி வந்தார்.

"உலக யுத்தமென்றால் சாமானியமல்ல. ஆர அமர யோசித்து நடத்தவேண்டிய காரியம். ஆகையால் உம்முடைய சந்தேகங்களை எல்லாம் ஒவ்வொன்றாய்க் கேட்டால் சொல்கிறேன்" என்பார் கல்கி ஆசிரியர்.

"உம்முடன் பேசினால்தான் கொஞ்சம் உற்சாகம் உண்டாகிறது" என்று சொல்லித் திருவாளர் பொதுஜனம் கதிரையைக் கிட்ட இழுத்துப் போட்டுக்கொண்டு கேட்பார்.

ஆமாம்; அரசியல் விஷயங்களையும் சமூகச் சிக்கல்களையும் கலை, கலாசாரம் போன்ற காரியங்களையும் தமிழகத்துக்கு இனிய தமிழில், செந்தமிழில் சொல்லும் விந்தை 'கல்கி' ஆசிரியருக்கே உண்டு. "தமிழில் எழுதலாம்; எளிய நடையில் எழுதலாம்; ஹாஸ்யமாக எழுதலாம்; அரசியலைப்பற்றி எழுதலாம்; சங்கீதத்தைப்பற்றி எழுதலாம்; சிற்பங்களைப்பற்றி எழுதலாம்; விஞ்ஞானம், ஆத்ம ஞானம் முதலிய சகல ஞானங்களைப்பற்றியும் விளங்கும்படி எழுதலாம்; கற்றவரும் மற்றவரும் படித்து இரசிக்கும் முறையில் எழுதலாம்" என்று வழி காட்டியவர் கல்கி என்றே கூறலாம்.

இன்று பல எழுத்தாளர்கள் பேனா பிடித்துப் பத்திரிகை ஆசிரியர்களென ஏறுபோற் பீடு நடைபோடச் செய்வதும் கல்கித் தமிழேயாகும்.

ஹிட்லர் குண்டு பொழிந்து உலகத்தை மின்வேகத்திற் கலக்கியடித்துக் கொண்டிருக்கையில் 1941 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு நாள் செந்தமிழ் நாட்டில் ஓர் அற்புதம் நடந்தது. இந்தச் சுப சமாசாரத்தை முன்னிட்டுத்தான் கொட்டு மேளங்கள் கொட்டின. மேற்குத் திசையிற் படார் படார் என்று வெடிச்சத்தம் கேட்டது. சூரியோதயம் என்றுமில்லாத காந்தியுடன் அன்று பிரகாசித்தது. காலை

வேளையிற் பட்சிசாலங்களின் கானம் வழக்கத்தைவிட அதிக இனிமையாக ஒலித்தது. எல்லாவற்றுக்கும் 'கல்கி'ப் பத்திரிகையின் வரவுதான் காரணம்.

கல்கிப் பத்திரிகையின் நல்வரவு தமிழ் மொழியின் நல்வாழ்வுக்கு வளம் செய்தது. தமிழகத்தின் மகோன்னத காலத்தைப் படம் பிடித்துக் காட்டக் கல்கி ஆசிரியருக்குக் கல்கி இதழ்கள் உபயோகமாயின. தமிழ் மக்களை இமயந் தொடங்கி ஈழம் வரை தம்முடன் அழைத்துச் சென்று தெய்வத் தமிழ் நாட்டின் சீர் சிறப்புக்களை எடுத்துரைத்தார். "செந்தமிழ் நாட்டில் பாய்ந்து வளப்படுத்தும் நதிக்கரைகளின் வழியாகப் பிரயாணம் செய்யும் போதெல்லாம் நம்முடைய உள்ளம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் போய்விடுகிறது. காவேரி, வைகை, தாமிரபர்ணி, கெடிலம், பெண்ணை, பாலாறு ஆகிய நதிகளின் கரைகளில் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் மக்கள் சிறப்படைந்திருக்கவேண்டும்? எத்தனை குருகுலங்கள் நடந்திருக்கவேண்டும்? எத்தனை கவிஞர்களும் புலவர்களும் பூங்குயில் கூவும் மாந்தோப்புக்களின் நிழலில் அமர்ந்து தமிழ்க் கவிதைகளின் இன்பத்தை அனுபவித்திருக்க வேண்டும்? எத்தனை செல்வர்களும் வள்ளல்களும் அந்த நதிக்கரைகளில் வாழ்ந்து பெயரும் புகழும் அடைந்திருக்க வேண்டும்?" என கல்கி ஆசிரியரே தமது முன்னுரையொன்றில் தாமே எழுதி ஆச்சரியமுறுகின்ருர்; பெருமையுமடைகின்ருர்.

ஆம், புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ் நாடு, கல்வி சிறந்த தமிழ் நாடாகவும் திகழ்கின்றது. இத்தென் தமிழ் நாட்டிலேதான் புகழ்க் கம்பர் பிறந்தார். மகா கவி பாரதி பிறந்தார். பாரெங்கும் பைந்தமிழ் மணம் பரப்பிய கல்கி பிறந்தார்.

நான் எழுதுகிற கதைகள் அமர இலக்கியங்கள் என்பது அடியேனுடைய தாழ்மையான அப்பிப்பிராயம். தாழ்மையான அபிப்பிராயமே இப்படியிருந்தால் உயர்வான அபிப்பிராயம் எப்படியிருக்கும் என்று சொல்லவேண்டியதில்லையல்லவா!

—கல்கி

# கல்கி பிறந்தார் - 2

டிங்! டிங்! டிங்!

டிணிங்! டிணிங்! டிணிங்!

போர்ட்டர் கண்ணுசாமி மணியைக் கீழே வைத்து விட்டுக் கைகாட்டி மேடைக்கு ஓடினான். 'டக—டக்' 'டக—டக்' என்று இழுத்தான். ஒரு கைகாட்டி சாய்ந்தது.

தூரத்தில் 'ஜிகு ஜிகு' 'ஜிகு ஜிகு' என்ற பத்தரை மணி வண்டி வந்துகொண்டிருக்கும் சத்தம் கேட்டது.

புதுச்சத்திரம் ரயில்வே ஸ்டேஷனில் பரபரப்புக்கு அறிகுறிகள் காணப்பட்டன. படுத்துக்கொண்டிருந்த ரயிலடி நாய் எழுந்து நின்று உடம்பைச் சிலிர்த்தது.

தூங்கி வழிந்த ரயிலடிக் கடைக்காரன் திடுக்கிட்டு எழுந்திருந்தான். அவன் எதிரே ஒரு தட்டில் நாலைந்து

எள்ளுருண்டையும் மூன்று வாழைப்பழங்களும் இருந்தன. அவற்றின்மீது மொய்த்த ஈக்களைப் பரபரப்புடன் ஓட்டினன்.

வெளியே, தூங்குமூஞ்சி மரங்களின் குளிர்ந்த நிழலில் இரண்டு கட்டைவண்டிகளும். ஒரு வில் வண்டியுங் கிடந்தன. வண்டியில் படுத்திருந்த வண்டிக்காரர்கள் கையில் தார்க்கழியுடன் கீழே குதித்தார்கள். படுத்து அசைபோட்டுக்கொண்டிருந்த மாடுகளும் ஒவ்வொன்ருக எழுந்து நிற்கத் தொடங்கின.......”

அடடா! இது என்ன? இப்படியான காட்சியை அதிகாலையில் புதுச்சத்திரம் ரயிலடியிற் கண்டுதானே இருக்கின்ருேம் எனத் தமிழ்நாட்டு வாசகர்கள் எண்ணி மகிழ்கின்றனர்.

முன்னர் எப்பவோ இதை வாசித்ததாக நினைவு இருக்கிறதே என்று சொல்லிக் கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் ஒரு முறை ஈழநாட்டு வாசகர்கள் படித்துவிட்டுத் தங்கள் சந்தேகத்தை நீக்க முயலுகின்றனர்.

இது எங்கள் ஊர்ப் புகை யிரத நிலையத்துக் காட்சி. அதே கடை இன்றுந்தான் இருக்கின்றது. ஆனால் அந்தக் கடை இருந்த இடத்தில் இப்போது சீமேந்துக் கட்டடம் ஒன்று வெகு கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது. எள்ளுருண்டைக்குப் பதிலாகக் ‘கேக்’ வகைகள் கண்ணுடிப் பெட்டிக்குள் காட்சியளிக்கின்றன. ஈக்கள் ‘நொய்’ என்று மொய்ப்பதில்லை. வில்லு வண்டிகளின் காலமும் மலையேறி விட்டது. ‘ஏ போட்டி’க்காரர்களல்லவா இன்று பறக்கின்றன!—எனப்பல்கலைக் கழகத்திற் பயிலும் மாணவர்கள் தமது நண்பர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

“என்ன சொல்லுகிறீர்! கிராமப் புறங்களில் இப்போதும் இதே காட்சியும் பரபரப்புந்தான்” என

வேறொரு நண்பர் இடையிற் புகுந்து பேச்சை வளர்க்கின்றார். பெரிய சண்டையே மூண்டு விடும்போலிருக்கின்றது.

இத்தனை வாக்கு வாதங்களையும் கிளப்பிச் சிந்தனையைத் தூண்டியுள்ள அந்தப் புகை யிரத நிலையம் அப்படியென்ன அப்பனை ஒரு இடமா என்று பலரும் எண்ணக்கூடும். அருமையான வாசகர்களே! அந்தப் புகை யிரத நிலையம் இங்கு முக்கியமானதல்ல; அதை எழுதிய ஆசிரியர்தான் முக்கியமானவர். இந்த மாதிரிப் பல வருடங்களுக்குப் முன் ஆரம்பமான ஒரு தொடர் கதை தமிழ்நாட்டில் ஒரு புதுமையை உண்டாக்கி, அதன் ஆசிரியரை 'அமரதாரா' ஆக்கிவிட்டது. கல்கி எழுதிய முதலாவது தொடர்கதையான 'தியாக பூமி'யைத்தான் இங்கு குறிப்பிடுகின்றேன். 'தியாக பூமி'யைப் படித்து விட்டுத்தான் வெள்ளிக்கிழமை இரவு படுப்பது என்று பிடிவாதமாகக் காத்திருக்கும் விரதங்கொள்ளும்படி செய்த முதல் எழுத்தாளர் கல்கிதான். தமிழ்நாடெங்கும் தமிழ்ப் பேசும் மக்கள் வாழுமிடமெங்கும் 'தியாக பூமி' அன்று அடைந்த செல்வாக்கு, வேறெந்தத் தொடர்கதைக்குங் கிட்டியிருப்பதாகச் சொல்ல முடியாது. 'விகடன்' அச்சு இயந்திரங்கள் தமிழ் மக்கள் ஆவலைத் தீர்க்க ஓய்ச்சலின்றி வேலை செய்து திணறிப்போயின என்று ஆசிரியர் எஸ். எஸ். வாஸன் அவர்களே தமது கட்டுரையில் எழுதிக் கல்கியைக் கீர்த்தியின் சிகரத்தில் அமர்த்தியிருக்கின்றார். குறைந்த பட்சம் மூன்று இலட்சம் தமிழர்கள் 'தியாக பூமி' கதையைத் தொடர்ந்து படித்திருக்கவேண்டுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதெனக் கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களே அந்தக் காலத்தில் எழுதியிருந்தார்கள்.

'தியாகபூமி' தமிழர்களைக் கவரச் செய்வதற்கு அப்போது பாரத புண்ணிய பூமியிற் கொழுந்து விட்டெரிந்த

சுதந்திரக் கனலும் ஒரு காரணமாகும். இப்படியான புறக் காரணம் ஒன்றுமில்லாது தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த பெருமை கல்கியின் சிறு கதைகளுக்கு உரியது. சிறு கதைகளின் இலக்கணங்களை நன்குணர்ந்த கல்கி அவற்றைச் சூட்சமாகக் கையாண்டார். சிறு கதை என்ருற் கதை சிறிதாக இருக்கவேண்டும்; அதிற் கதையுமிருக்க வேண்டுமென 'ஆனந்த விகடன்' ஆசிரியராகப் பணி யாற்றிய காலத்திற் சென்னை வானொலியிற் சிறுகதைபற்றிப் பேசும்போது கல்கி கூறிய வார்த்தைகள் இன்றும் எனது காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

கோயில்களும் வீடுகளும் கட்டுவதில் எப்படிச் சிற்பக் கலை இருக்கிறதோ, அப்படியே கதைகள் கட்டுவதிலும் சிற்பக்கலை இருக்கிறது. கதைகளிலும் முகப்புகள், கோபுரங்கள், பிரசாரங்கள், கர்ப்பக் கிரகங்கள் எல்லாம் உண்டென்று சொல்லலாம். ஆதியான கதைகளிலும் சிற்பக்கலை ஒருவகையாக உண்டு; அனால் சமீபத்தில் மேல் நாட்டு ஆசிரியர்கள் கதைகள் சம்பந்தமாகக் கண்டு பிடித்து ஏற்படுத்தி வைத்திருக்கிற உத்திகள் ரொம்பவும் அதிசயித்துப் பாராட்டும் விதமாக நுட்பமாயும் எண்ணிறந் தனவாயும் இருக்கின்றன. அவற்றைக் கையாளாத மேல்நாட்டுக் கதாசிரியர்கள் யாருமே இல்லை. கல்கியும் அவற்றைத் தம் கதைகளிலே திறம்படக் கையாண்டிருக் கிருர் என இரசிகமணி டி. கே. சி. 1937 ஆம் ஆண்டிற் கல்கியின் சிறு கதைகளைப் பாராட்டி எழுதியிருக்கின்ருர்.

சிறுகதை யென்ன? தொடர்கதைகளிலும் அதிசயிக்கத் தக்க முறையில் உத்திகளைக் கல்கி கையாண்டுள்ளார். இங்கு ஆரம்பத்தில் அனைவரையும் ஆசிரியர் கல்கி புதுச் சத்திரம் புகை யிரத நிலையத்துக்கு அழைத்துக்கொண்டு சென்ருரே, அதற்கு நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

" ஆரம்பிக்கும்போது, என் கதையை நீங்கள் நம்புவீர்களோ என்ற சந்தேகம் உண்டாகிறது. வேறு யாராவது அத்தகைய சம்பவம் தங்கள் வாழ்க்கையில் நடந்ததென்று சொன்னால் எனக்கும் அவநம்பிக்கைதான் பிறக்கும். கை தேர்ந்த கதாசிரியர்களைப்போல் அசாத்தியமான விஷயங்களையும் நடந்ததுபோல் நம்பச் செய்யும்படி எழுதும் சக்தியும் எனக்கில்லை. எழுதும் பழக்கம் எனக்கு அதிகம் கிடையாது. ஒரே ஒரு தடவை கிறுக்குப் பிடித்துப்போய் ஒரு நாவல் எழுதுவதென்று தொடங்கினேன். காமா சோமா வென்று அதை எழுதி முடித்தும் விட்டேன். ஆனால் அதை அப்புறம் ஒரு முறை படித்தபோது சுத்த மோசமென்று தோன்றியபடியால் அதை அச்சிடும் முயற்சி எதுவும் செய்யவில்லை. சிநேகிதர் ஒருவர் ஒரு தடவை என் வீட்டிற்கு வந்திருந்த போது அந்தக் கையெழுத்துப் பிரதியைப் பார்த்துவிட்டு அதைப் படிக்கவேணுமென்று சொல்லி எடுத்துக்கொண்டு போனார். அதை அவர் திருப்பிக் கொடுக்கவுமில்லை. நான் அதைப்பற்றிக் கவலைப்படவுமில்லை.

" எனக்கு எழுதும் திறமை இல்லைத்தான். ஆகையால் காது வைத்து, மூக்கு வைத்து, எல்லாவற்றையும் பொருத்தமாய்ச் சேர்த்து எழுத முடியாது. நடந்தது நடந்தபடிதான் சொல்லக்கூடும். 'ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கை அனுபவங்களைக்கொண்டு ஒரு சிறு கதை கட்டாயம் எழுத முடியும்' என்று யாரோ ஓர் அறிஞர் கூறியிருக்கிறார். அந்தத் தைரியத்தினால் தான் இதை நான் எழுதத் துணிகிறேன்" இது எனது சுய புராணமென வாசகர்கள் எண்ணவேண்டியதில்லை, அன்றேல் இது கல்கி ஆசிரியரின் சுயசரிதையுமல்ல. அவர் தமது சிறு கதையொன்றில் இப்படித்தான் ஆரம்பித்திருக்கின்றார். உண்மைபோன்ற ஒரு சூழ்நிலையைச் சிருட்டித்துக்கொண்டு

சிறு கதைகளுக்கு அவர் காது, மூக்கு வைக்கும் வேலைப் பாடுகளில் இதுவுமொன்று.

இப்போது நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தமிழ்ப் பத்திரிகைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் அதிகப் பக்கங்களை நிரப்புவன சிறு கதைகள்தாம். ஆனால் இக்கதைகள் வாழ்க்கையை உண்மையாகப் படம் பிடிப்பனவாயில்லை. கலைஞனின் கைவண்ணமோ இலக்கிய இனிமையோ இதயத்தை ஈர்த்துச் செல்லும் காந்த சக்தியோ அவற்றில் கிடையா. கலையொரு வியாபாரமாக மாறிவருவதால் எந்த விதத்திலும் பணம் சேர்ப்பதையே தொழிலாகக்கொண்ட எழுத்தாளர்கள் பணத்துக்காகத் தங்கள் கற்பனைகளைப் பாழாக்கிவிடுகின்றனர். கலை, ஒருவரின் பிழைப்பாக அமையுமிடத்து அவரது சிருட்டிகள் மலைபோற்குவிந்து பழைய சங்கதிகளே மீண்டும் மீண்டும் இடம் பெறுகின்றன. கல்கியின் சிறு கதைகள் இதற்கு விதி விலக்கானவை. அவருடைய கதைகள் என்றுமே புத்தம் புதிய உருவம் பெற்றுக் கன்னற்பாகாகி விடுகின்றன.

"பட்சி ஜாலங்கள் உதய ராகம்பாடிச் சூரியோதயத்தை வரவேற்கும் மனோகரமான காலை நேரத்தில், கார்காலத்தின் குளிர்ந்த காற்று மரக்கிளைகளின்மீது விளையாடி மழைத்துளிகளை உதிர்த்துக்கொண்டிருந்த கிராமாந்தரத்துச் சாலையில் நானும் மைதிலியும் கைகோத்துக்கொண்டு, எங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தைத் தொடங்கினோம்" என்று கல்கி கதையை முடிக்கும்போது இதயமே குதூகலிக்கின்றது. 'குளிர்ந்த காற்று மெத்தெனத்தவழ்ந்து வருகின்றது. மழைத் துளிகள் முத்துப்போல் உதிர்கின்றன.' இந்தமாதிரி இனிமையூட்டி இன்பமூட்டி இந்திரஜால வித்தை காட்டக் கன்னித் தமிழகத்திற் கல்கி பிறந்தார்.

பழந்தமிழ் நாட்டில் மலைகளிலும் குன்றுகளிலும் கோட்டை கொத்தளங்கள் அமைத்துக் கொண்டு வாழ்ந்த வீர மன்னர்களின் வாழ்க்கைச் சரிதங்கள் எல்லாம் சரி வர எழுதப்பட்டிருக்குமாயின், ஆகா, எத்தனை எத்தனை பெரிய பெரிய புத்தகங்கள் ஆகியிருக்கும் ? ஒரு பெரிய புத்தகசாலையை நிரப்பி விடுவதற்கு அவை போதுமானவையா யிருக்குமே !

—கல்கி

# கல்கி பிறந்தார் - 3

பலகாலமாகப் பண்டைத் தமிழகத்தின் பெருமை பற்றியும் பண்பாட்டின் சிறப்புப் பற்றியும் கேள்விப்பட்டுக் கொண்டிருந்தேன் ; படித்துமிருந்தேன். ஆனாலும் கேட்டது படித்தது எதுவும் உள்ளத்தில் நன்கு பதியவில்லை ! நம்பிக்கையும் அவ்வளவாக உண்டாகவில்லை.

மகாபலிபுரம் என்று வழங்கும் மாமல்லபுரத்துக்குச் சென்று கண்ணால் நேரிலே பார்த்தபிறகு நம்பிக்கை ஏற்பட்டது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நமது செந்தமிழ் நாட்டில் இவ்வளவு அற்புதமான சிற்பங்களைச் செய்த மகா சிற்பிகள் இருந்தார்கள் ! அவர்களை ஆதரித்துப் போஷித்து உற்சாகப்படுத்தி அவர்களுடைய

கலைத்திறனைப் பிரகாசிக்கச் செய்த மன்னர்களும் இருந் தார்கள்.

அப்படியென்றால், அந்தக் காலத்தில் தமிழகத்தின் பண்பாடும் சமூக வாழ்க்கையும் எவ்வளவு மேம்பட்டிருக்க வேண்டும்? அத்தகைய மேம்பாட்டை ஒரு சமூகம் அடைய வேண்டுமானால் அதற்கு எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னாலிருந்து அச்சமூகத்திலே கலையும் கல்வியும் நல்லர சாட்சியும் நல்லொழுக்கமும் வளர்ந்து வந்திருக்க வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்கப் பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்த நம் மூதாதையர்களிடம் பக்தியும் மரியாதையும் பொங்கி வளர்ந்தன......

ஆகா ! கட்டுரை ஆசிரியர் எங்களையெல்லாம் மாமல்ல புரத்துக்கு அழைத்துச் செல்லப் போகின்றார் என வாசகர் கள் ஆனந்தமடையக்கூடும். அந்தவிதமான அற்புதத்தைச் செய்வதற்கு எனக்குக் கற்பனை ஊற்றே கிடையாது. கல்கி ஆசிரியர் இரண்டு தினங்கள் மாமல்லபுரத்தில் தங்கியிருந்து அற்புதச் சிற்பங்களைத் தாங்கிய கற்பாறைகளைப் பார்த்தார். ஒவ்வொரு கல்லும் அவருடன் பேசிற்று. அவற்றை வைத்துக்கொண்டு பண்டைத் தமிழகத்தின் பழம் பெருமைகளை யெல்லாம் ஆயிரம் ஆயிரம் பக்கங்களில் எழுதி எழுதிக் குவித்திருக்கின்றார். அவர் எழுதியிருப்பதைத் தான் நீங்கள் ஆரம்பத்திற் படித்துவிட்டு "இது என்ன கல்கி எழுதுவதுபோல இருக்கின்றதே!" என ஆச்சரியப்பட் டீர்கள். உண்மைதான், சாட்சாத் கல்கி ஆசிரியரவர்களைக் கொண்டே உங்களிடம் பேசவைத்தேன்.

சிதைந்த சிற்பங்களையும், உடைந்த கோபுரங்களையும், வரண்ட வரலாற்றுச் செய்திகளையும் வைத்துக்கொண்டு தமிழகத்தின் பழங்கால உன்னதத்தை நம் கண் முன்னே காட்டிய கற்பனையாளர் கல்கி ஆசிரியர் எனப் பேராசிரியர்

அ. சீனிவாசராகவன் அவர்கள் கூறியுள்ளாராயின் கல்கியின் கற்பனை வளத்தைப்பற்றி எம்போன்றோர் வேறு எந்த வார்த்தைகளிலேதான் வர்ணிக்க முடியும் !

நாவல் எழுதுபவர்கள் நல்ல கலை ருசியையும் கற்பனைத் திறனையும், விரிந்த அறிவையும், மனித இயற்கையின் ஆழ்ந்த தன்மையையும் திரிபுகளையும் பற்றித் தெள்ளிய ஞானத்தைப் பெற்றிருக்க வேண்டும். எங்கள் சொந்த நாட்டு நாகரிகத்தையும், சமுதாய வாழ்வையும், சரித்திரத்தையும் நன்றுப் தெரிந்திருக்கவேண்டுமென இலக்கிய விமர்சகர் ஒருவர் தமது நூலிற் கூறியிருக்கின்றார். இத்தனை திறமைகளையும் கல்கி ஆசிரியரிடம் நிறைய உண்டு என்றால் அது மிகையன்று.

தமது கற்பனைத்திறமையை அவர் சரித்திர நாவல்களில் நயம்படக் கையாண்டு இராஜராஜ சோழனுடைய சாதாரண மக்களும் அறியுமாறு செய்துள்ளார். சோழநாட்டுப் புகழைத் தஞ்சையிலுள்ள வானுயர்ந்த கோபுரங்கள் விளக்கு கின்றன. அதேபோன்று பல்லவ மன்னனின் பெருமையை மாமல்லபுரத்துச் சிற்பங்கள் எடுத்துரைக்கின்றன.

" இத்தகைய, அற்புதச் சிற்ப வடிவங்களைக் கொண்ட மாமல்லபுரத்துக்கும், பல்லவ சாம்ராஜ்யத்துக்கும், சமீப காலத்தில் மறுபடியும் ஒரு யோகம் பிறந்தது.

"அன்று பல்லவ சக்கரவர்த்தியும், அவரது ஆஸ்தான சிற்பியும் அந்த இடத்துக்கு விஜயம் செய்ததுபோலவே சில வருஷங்களுக்கு முன்னர் நமது எழுத்துலகின் சக்கரவர்த்தியாக விளங்கும் கல்கி ஆசிரியரும், அவரது ஆஸ்தான சித்திரக்காரராயிருந்தவருமான மாலியும் விஜயம் செய்தார்கள். மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் கண்டு மயங்கி நின்றார்கள்.........கல்கி ஆசிரியரின் மனக்கண் திறந்தது. அற்புதக் காட்சிகள் எல்லாம் திரைப்படம்போல்

அடுத்தடுத்து வந்தன......கடலலையின் பேரொலியினுல் ஆசிரியர் சொப்பன உலகிலிருந்து விடுபட்டுப் புற உலகுக்கு வந்தார்........மாமல்லபுரத்துக் காட்சிகளும், மகேந்திர சக்கரவர்த்தியும், பார்த்திபனும், விக்கிரமனும், குந்தவியும். சிவகாமியும் பேரதிர்ஷ்டம் வாய்ந்த பாக்கியசாலிகளா ஞர்கள். கல்கி ஆசிரியரின் கனவு 'பார்த்திபன் கன' வாகவும், 'சிவகாமியின் சபத' மாகவும் உருப்பெற்றது. தமிழகத்தின் கலைச் செல்வங்களும் தமக்குரிய புகழையும் பெருமையையும் பெற்று மீண்டும் பிரகாசிக்கலாயின.''

பழந்தமிழ் நாட்டு மன்னர்களுக்குள்ளே ஒப்புயர்வு பெற்றவரும், தமது இணையிலாத புகழை என்றும் அழியாத வண்ணம் கல்லிலே செதுக்கி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியைக் கல்கி ஆசிரியர் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்திருக்கும் கலையழகே தனி.

செந்தமிழ் நாடெங்கும் மகா சிற்பிகளும், சித்திரக் கலைஞர்களும் தோன்றிச் சிற்ப சித்திரக் கலைகளை அற்புமாக வளர்த்து வந்தார்கள். குன்றுகளைக் குடைந்து கோயில்க ளாக்கும் கலையும் கற் பாறைகளிலே சிற்பங்களைச் செதுக்குங் கலையும் எங்கெங்கும் பரவி வந்தன எனக் கல்கி ஆசிரியர் சொல்லும்போது, இளஞ் சிற்பிகள் கருங் கற்களிற் கல்லுளுயினுல் வேலை செய்யும்போது உண்டாகும் 'கல் கல்' என்ற ஓசையே கேட்கின்றது. மறுகணம் ஆயனச்சிற்பியின் மகள் சிவகாமிதேவியின் பாதச்சதங்கை ஒலியும் பட்சிகளின் மதுர கானத்துடன்கலந்தொலிப்பதைக் கேட்டு மகிழ்கின்ருேம்.

மாமல்ல சக்கரவர்த்தி மற்ற எல்லாரையும்போலச் சற்று நேரம் தாமும் மெய்மறந்து நின்று சிவகாமியின் அற்புத நடன அபிநயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்—என்று கூறிக் கல்கி ஆசிரியர் எம்மை எல்லாம் ஏகாம்பரர் ஆலயத்

துக்குள் அழைத்துச் செல்லும்போது ஒரு தெய்வீக உணர்ச்சி எம்மை ஆட்கொள்ளுகின்றது. கற்பனைக் கடலிற் திளைத்துப் பக்தி வெள்ளத்தில் மிதக்கின்றோம்.

அமைதி குடிகொண்டு விளங்கும் காவேரி தீரம் மீண்டும் வருகின்றோம். உதயசூரியனின் செம்பொற் கிரணங்களால் நதியின் செந்நீர்ப் பிரவாகம் பொன்னிறம் பெற்றுத் திகழ்கின்றது. இவ்வாறு மேவிய ஆறுகள் பல ஓடித் திருமேனி செழித்த தமிழ்நாட்டின் சிற்ப சித்திரங்களின் அற்புதங்களை இதிகாசமாக இயம்பிக் கலைவளம் மிகுந்த தமிழ்நாட்டிற் களிநடம் புரியக் கல்கி பிறந்தார்.

நம்முடைய பழந்தமிழ் நாட்டு முன்னோர்கள் தங்கள் காலத்திற் சாதித்த அரும்பெருங் காரியங்களைக் குறித்துப் பெருமிதமும் பெருவியப்பும் கொள்ளாமலிருக்க முடியாது. நம் மூதாதையர்கள் தங்களுடைய நலனுக்கும் தங்கள் காலத்திய மக்களின் நலனுக்கும் உரிய காரியங்களை மட்டுமா செய்தார்கள்? தாய்த் திருநாட்டில் தங்களுக்குப் பிற்காலத்தில் வாழையடி வாழையாக வரப்போகும் ஆயிரங்கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும் மாபெரும் செயல்களை நிறைவேற்றிவிட்டுப்போனார்கள் அல்லவா?–கல்கி

# கல்கி பிறந்தார் - 4

ஆதி அந்தமில்லாத காலவெள்ளத்தில் கற்பனை ஓடத்தில் ஏறி நம்முடன் சிறிது நேரம் பிரயாணம் செய்யுமாறு நேயர்களை அழைக்கிறோம். விநாடிக்கு ஒரு நூற்றாண்டு வீதம் எளிதில் கடந்து இற்றைகக்குத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முந்திய காலத்துக்குச் செல்வோமாக.

*　　*　　*　　*

" கற்பனையாவது, ஓடமாவது? காற்றினும் வேகமாக முகிற் கூட்டங்களையும் கிழித்துக்கொண்டு விர் எனப் பறக்கும் அதிஅற்புதமான ஆகாய விமானங்கள் மலிந்துள்ள இக்காலத்திலுமா ஓடத்திற் பிரயாணம்? நன்று! நன்று!! நிறுத்தும் உமது கற்பனைத் தேரை" என வாசகர்கள் என்னைப் பார்த்துக் கேட்க உன்னுகின்றனர். [இந்த இடத்தில் வந்தியத் தேவன் குறுக்கிட்டு 'உமக்குப் புண்ணியமாய்ப் போகட்டும், நிறுத்தும்!' என்று உரத்த குரலில் சொல்வது கேட்கின்றது. வந்தியத்தேவன் 'பொன்னியின் செல்வன்' கதையிலுள்ள ஒரு கதா பாத்திரம்] 'மறுகணம், ஆசாமி ஏதோ புலம்புகின்றார்; தன்பாட்டிற் புலம்பட்டும்' எனச் சொல்லிக்கொண்டு பத்திரிகையை மூடி வைக்க மனமில்லாதவர்களாய் ஆவலுடன் தொடர்ந்து படிக்கின்றனர்.

இப்படியான ஆவலைத் தமிழகத்திற் தூண்டச் செய்து தமிழர் சமூகத்தைத் தம்முடன் அழைத்துச் சென்று 1070 ஆண்டுகளுக்கு முன்னுற் சோழ மகா சாம்ராஜ்யம் இணையற்ற வலிமையுடன் விளங்கிய பெருமைகளை ஒவ்வொன்ருகச் சொல்லிச் சென்றார், பொன்னியின் செல்வரான கல்கி ஆசிரியர்.

கல்கி ஆசிரியரின் காவியச் சோலையிற் கொய்த மலர்களைக்கொண்டு தொடுக்கப்பெற்றுவரும் இக்கட்டுரைகள் தமிழ்நாட்டு வாசகர்களையும் ஈழநாட்டுத் தமிழன்பர்களையும் கவர்ந்து வருவதை அறிந்து மகிழ்கின்றேன். கல்கியின் பேனு செய்துள்ள விந்தைகளை நினைந்து நினைந்து இறும்பூதெய்துகின்றேன்.

ஆமாம், நமது முன்னோர்கள் எத்தனை பல அபாயங்களைத் தாண்டிச் சோழப்பேரரசை நிலைநாட்டினார்கள் என்பதை எண்ணும்போது நம் தந்தையர் செய்த விந்தை

களைக் கண்டுங் கேட்டும் மகிழ்வதற்காகக் கற்பனை ஓடத்தில் ஏறிக் கல்கி ஆசிரியருடனும் இக்கட்டுரை ஆசிரியருடனும் பிரயாணம் செய்ய எவர்தான் பின்னிற்பார்கள் ?

தமிழகத்துச் சரித்திரத்தைப் பின்னணியாகக்கொண்டு கல்கி எழுதிய பார்த்திபன் கனவையும், சிவகாமியின் சபதத்தையும் படித்து மகிழ்ந்த கோடானுகோடித் தமிழ் மக்கள் 'பொன்னியின் செல்வன்' கதையைப் படிப்பதிலும் மிகுந்த ஆர்வங் காட்டினர்.

சோழநாட்டின் தலைசிறந்த வீரர் படைகள் ஈழம் புகுந்து போர்க்களங்களில் வெற்றிமேல் வெற்றி ஈட்டிய விவரங்களைப் படித்தனர். ஆயிரம் ஆண்டுகளாக இலங்கை அரசர்கள் வீற்றிருந்து அரசு புரிந்த அநுராதபுரத்தைச் சோழ நாட்டு வீரப்படையினர் கைப்பற்றி வெற்றிக் கொடி நாட்டிய வரலாற்றினைப் புத்துணர்ச்சியுடன் வாசித்தனர்.

தமிழ்நாட்டின் சரித்திரத்தில் ஒப்புயர்வற்ற மகோன்னதமான காலத்திற் 'பொன்னியின் செல்வன்' என்னும் கதை நிகழ்வதாயிற்று. பாடலிபுரத்து மௌரிய சாம்ராஜ்ஜியத்தையும், உஜ்ஜயினியின் குப்த ஏகாதிபத்தியத்தையும் கன்னோசியின் ஹர்ஷவர்த்தன மகாராச்சியத்தையும், பின்னால் வரப்போகும் அக்பரின் பேரரசையையும் நிகர்த்த சோழமகாராஜ்ஜியம் அப்போது உருவாகிக்கொண்டு வந்தது. அப்படி உருவாகி வந்த சமயத்தில் உட்பகையினாலும் வெளிப்பகையினாலும் சில பெரும் அபாயங்கள் தோன்றின. அந்த அபாயங்களை யெல்லாம் நமது முன்னோர்கள் எதிர்த்து நின்று போராடிச் சோழப் பேரரசை நிலைநாட்டிய வரலாற்றினையே சரித்திரக் கதையாகக் கல்கி ஆசிரியர் தமிழ் மக்களுக்குத் தந்துள்ளார். 'பொன்னியின் செல்வன்' சரித்திரமன்று. அது சரித்திரக் கதையென கல்கி ஆசிரியரே சொல்லி வைத்துள்ளார். ஆனால் கதை

யில் வரும் சில கதாபாத்திரங்கள் சரித்திர புருடர்கள். கல்வெட்டுகளிலும் தாமிரப் பட்டயங்களிலும் பெயர் பொறிக்கப்பட்டவர்கள். சில முக்கிய நிகழ்ச்சிகளும் சரித்திர ஆதாரம் உள்ளவையெனக் கல்கி ஆசிரியரே கூறியுள்ளார். அக்காலத்தில் வாழ்ந்த வீரர்களின் ஆற்றலைக் கேட்டால் இக்காலத்து அணுக்குண்டு, ஜல வாயுக்குண்டு வீரர்களே நடுநடுங்குவார்கள். "வீமனையும் பீஷ்மனையும் துரோணரையும் கடோத்கஜனையும் அபிமன்யு வையும் ஒத்த வீரர்கள் தமிழகத்தில் அவதரித்தார்கள்— உலகம் வியக்கும்படியான தீரச் செயல்களைப் புரிந்தார். போரில் அடைந்த ஒவ்வொரு வெற்றியும் இவர்களுடைய தோள்களுக்கு மேலும் வலிமை அளித்தது—வயது முதிர்ந்த கிழவர்கள் மலையைப் பெயர்த்தெடுக்கும் வலிமை பெற்றிருந்தார்கள். பிராயம் ஆகாத இளம் வாலிபர்கள் காற்றில் ஏறிச் சென்று வான முகட்டை அடைந்து விண் மீன்களை உதிர்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள்."

இவர்களின் ஆற்றல் கல்கியின் கற்பனை வளத்தில் விளக்கப்பெற்ற சிறப்புக்கள் பொன்னியின் செல்வனிற் சுடர்விட்டு ஒளிர்கின்றன.

'பொன்னியின் செல்வன்' சரித்திரக் கதை மூலம் ஈழத்துக்கும் தமிழ்நாட்டுக்குமுள்ள பழைய தொந்தங்களை யெல்லாம் கல்கி ஆசிரியர் நன்கு பயன்படுத்தி இருநாட்டின் கலாசாரத் தொடர்புகளையும் காவியத்திலும் ஓவியத்திலும் கண்டு களிக்கச் செய்துள்ளார்.

சரித்திரக் கதைகளை எழுத முன்னர் அக்கதைகளில் வரும் கதாபாத்திரங்களினின்றும் சரித்திர புருடர்களி னின்றும் கால்பட்ட இடங்களை நேரிற் கண்டு தமது கற்பனைக்கு உதவியான உண்மைகளைக் கல்கி பெற்றுர். அவற்றைத் தமது தொடர் கதைகளில் மிகத்திறமையாகக்

கையாண்டு சரித்திர ஆராய்ச்சியாளருக்கே சவால் விடுத்தார்! இதன் பயனாக அனுராதபுரமும், பொலநறுவையும், சிகிரியாவும் மீண்டும் பொலிவுற்றன. வட இலங்கையிலுள்ள கரைப்பட்டினங்கள் சேதுக் கரையுடன் அலைமோதின. இவை சரித்திரக் கதைகளைச் சொல்லிப் பழைய உறவுகளை நினைவூட்டிக்கொண்டன.

தமிழ் நாட்டின் வளமிகு காட்சிகள் கல்கியின் பேனா முனையில் நர்த்தனம் புரியும் அழகு தனிச் சிறப்பு வாய்ந்தது. இதோ சோழவள நாட்டுக்கு வருகின்றோம். "சோழ நாட்டை அணுகும் போதே ஆனந்த கோலாகலமாயிருக்கிறதே? கொள்ளிடத்தைத் தாண்டிவிட்ட பின்னர் அச்சோழ நாட்டின் நீர்வளமும் நிலவளமும் எப்படியிருக்கும்? அந்நாட்டில் வாழும் மக்களும் மங்கையரும் எப்படியிருப்பார்கள்? எத்தனை நதிகள்? எத்தனை குளங்கள்? எத்தனை தெளி நீர் ஓடைகள்? கவிகளிலும் காவியங்களிலும் பாடப்பெற்ற பொன்னி நதியின் காட்சி எப்படி யிருக்கும்? அதன் கரையிலே பூத்துக் குலுங்கும் புன்னைமரங்களும் கொன்னை மரங்களும் கடம்ப மரங்களும் எத்தகைய மனோகரமான காட்சியாயிருக்கும்?

"நீரோடைகளில் குவளைகளும் குமுதங்களும் கண் காட்டி அழைப்பதும் செந்தாமரைகள் முகமலர்ந்து வரவேற்பதும் எத்தகைய இனிய காட்சியாயிருக்கும்? காவேரியின் இருகரைகளிலும் சிவ பக்திச் செல்வர்களான சோழ பரம்பரையினர் எடுப்பித்துள்ள அற்புத வேலைப்பாடமைந்த ஆலயங்கள் எவ்வளவு அழகாயிருக்கும்" இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த தெய்வத் தமிழ்நாட்டு முன்னோர்கள் சாதித்த அரும்பெருங் காரியங்களைக் கற்பனைக் கண் கொண்டு ஏட்டில் எழுதக் கல்கி பிறந்தார்.

ஒவ்வொருவரும் ஏதாவது முக்கியமாகச் செய்ய வேண்டிய காரியமிருந்தால், ஒத்திப்போடாமல் உடனே செய்துவிட வேண்டும். என்னுடைய அதிசயமான அனுபவத்தைத் தமிழ் மக்கள் கட்டாயம் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே இறைவன் என்னைக் காப்பாற்றி இவ்வளவு நாள் உயிரோடு வைத்திருக்கிருர் என்று நம்புகிறேன்.

— கல்கி

# கல்கி பிறந்தார் - 5

வசந்த காலத்தில் ஒரு நாள் தென்றற் காற்றுத் தவழ்ந்து வர ஆரம்பிக்கிறது. மறுநாள் பார்த்தால் மாமரங்களெல்லாம் இளந்தளிர்கள் விட்டிருக்கின்றன. பூஞ் செடிகளிலே மொட்டுக்கள் அரும்பியிருக்கின்றன. இரவானதும் எல்லா மொட்டுக்களும் குப்பென்று மலர்ந்து மணம் வீசுகின்றன. இதெல்லாம் இந்திரஜாலம் போலத் தான் தோன்றுகின்றது. ஆனுல் தோட்டக்காரனைக் கேட்டால் உண்மை தெரியும். இந்திரஜாலமாவது, மகேந்திரஜாலமாவது? ஒன்பது மாதங்களாக நான் எருவிட்டு, களை பிடுங்கி, தண்ணீர் ஊற்றிக் கண்ணுங்கருத்துமாய்ச் செடி

களைப் பாதுகாத்து வந்ததன் பலனையல்லவா இப்போது காண்கிறீர்கள் ? என்று தோட்டக்காரன் பதில் சொல்வான். அதுபோலவே இப்போது தமிழ் நாட்டிலே நாம் பார்க்கும் மறுமலர்ச்சியும் எத்தனையோ தோட்டக்காரர்கள் பாடுபட்டு உழைத்ததன் பலன்தான். அப்படிப்பட்ட தோட்டக்காரர் களுக்குள் தலைசிறந்தவர் யார் என்று சொல்லவும் வேண்டுமா ?

இப்படியெல்லாம் நான் வாசகர்களைப் பார்த்து ஆச்சரியமானதொரு கேள்வியைக் கேட்கவில்லை.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1941–ஆம் ஆண்டிலே திருச்சி வானொலியில் தமிழின் மறுமலர்ச்சிபற்றியும், வசனநடை வளர்ந்த வரலாற்றினைப்பற்றியும் பேசியபோது தான் மேற்கூறியவாறு ஆச்சரியமானதொரு கேள்வியை வானொலியின் சிறுவாய் முன்பாக இருந்துகொண்டு தமிழ் மக்களைக் கேட்டார்.

கேள்வியைக் கேட்டுவிட்டு எழுந்து போகாமல் அதற்கு மறுமொழியும் கூறியிருந்தார். "ஆமாம்; ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்தான். தமிழ் இலக்கியத்துக்குப் பல துறைகளிலும் புத்துயிரளித்தவர் பாரதியார்" என்று அவர் தாமே விடையுமளித்திருந்தார்.

இதே கேள்வியை இன்று தமிழ் மக்களைப் பார்த்துக் கேட்டால் அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா ? "இப்போது தமிழ் நாட்டிலே நாம் பார்க்கும் மறுமலர்ச்சியும் எத்தனையோ தோட்டக்காரர்கள் பாடுபட்டு உழைத்ததன் பலன்தான். அப்படிப்பட்ட தோட்டக்காரருள் தலைசிறந்தவர் கல்கி" என்றே சந்தேகமின்றிப் பதில் கூறுவார்கள்.

இப்படிக் கூறும்போது தமிழ் மக்கள் பாரதியாரின் மேதையைக் குறைவுபடுத்தவில்லை. கல்கி, வசனநடைக்கு

ஒரு புதிய சக்தியை ஊட்டி எழுத்தின் மூலம் மக்கள் தமிழ்ப் பற்றுக் கொள்ளுமாறு செய்த பெருமையை அவர்கள் எப்படி மறப்பார்கள்? ஆம், தமிழ் இலக்கியமும் தமிழ்க் கலைகளும் புத்துயிர் பெறச் செய்தவர் கல்கி. தமிழ்ப் பத்திரிகைகளை சாதாரண மக்களிடையே பரவச் செய்தவரும் அவரேயாவர்.

அரசியல், சிறுகதை, தொடர்கதை, பிரயாணக் கட்டுரை, நகைச்சுவைக் கட்டுரை, கவிதை, இசை, பரத நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகிய சகல துறைகளிலும் மிகத் துணிச்சலாக உழைத்து வெற்றிகண்டவர் கல்கி யென்றால் அதை எவரும் மறுக்க முன்வரமாட்டார்கள். எனவே, கனிந்த தமிழ் நடைக் கல்கியெனவும், மாற்றான் தோட்டத்து மலராயினும் மணந்தந்த மலரேயெனவும், 'பளிச்' சென்று எடுத்துவீசும் திராணிமிக்கவர் கல்கி யெனவும் பத்திரிகைகள் புகழ்வதில் ஆச்சரியமெதுவுமில்லை.

தமக்குச் சரியென்று பட்டதை எடுத்துவீசும் திராணி அவருக்கு மிக அதிகம். அறிஞர் அண்ணா அவர்களை, அவர் பெர்னாட்ஷா, ஷேக்ஸ்பியர் என்றெல்லாம் பாராட்டி எழுதிய பொழுது, "ஏன் திடீரென்று தலையில் தூக்கிவைத்துக் கொள்கிறீர்கள்!" என்று அவரைச் சிலர் கேட்டனராம். அதற்கு அவர், "அழகாக இருப்பதால் தூக்கி வைத்துக் கொள்கிறேன். அவலட்சணத்தையா வைத்துக்கொள் கிறேன்? கங்கை அழகாக இருப்பதால், சிவபிரான் தலையில் வைத்துக்கொண்டான். குரூபியாயிருந்தால், காலிலல்லவோ வைத்திருப்பான்!" என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம். இப்படிப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் தமது கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார்.

கல்கி தமது நூல்களுக்கு முகவுரைகள் எழுதுவதையும் ஒரு தனிக்கலையாக்கிக் கொண்டார். சில நூல்

களுக்கு அறிஞர்களின் அணிந்துரையைப் பெற்றிருக்கிறுர். எனினும் தமது முன்னுரைகளே மிகத் துணிகரமாகத் தமது நூல்களுக்கு எழுதி வந்தார். 'மூன்று மாதக் கடுங்காவல்' என்ற நூலின் முகவுரையில் அவர் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள் : "இந்தப் புஸ்தகத்துக்கு யாரை முன்னுரை எழுதச் சொல்லலாமென்று ஆழ்ந்த யோசனை செய்த போது, வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவானேன் என்ற பழமொழி ஞாபகத்துக்குவந்து, நானே எழுதிவிடலா மென்ற முடிவுக்கு வந்தேன் !"

தனது திறமையில் நம்பிக்கையுள்ள எழுத்தாளன் தான் இப்படி எழுத முடியும். இந்தத் துணிவுதான் அரசியற் கொந்தளிப்புகளின் போது எல்லாம் இராஜாஜியைத் தனித்து நின்று ஆதரிக்கச் செய்தது.

'கர்நாடகம்' என்ற புனே பெயரிற் கல்கி 'ஆடல் பாடல்' பூத்துக்குலுங்கச் செய்த பணியை இன்னிசைக் கருவிகள் தாமும் இலேசில் மறந்துவிட மாட்டாவென்ருல். இரசிகர்களும், பாடகர்களுமா மறந்து விடபோகிருர்கள் ? "என்னைச் சங்கீதம் கேட்கச் செய்து இழுத்துப்போட்ட ஆள் கிருஷ்ணமூர்த்தி. 'கர்நாடகம்' என்ற பெயரில் சங்கீத விமர்சனம் எழுதுவார். சங்கீதம் பாடுகிறவர்களும், வாசிப்பவர்களும் தாங்கள் பாடுவதைவிட அவர் எழுதினுற் சந்தோஷப்படுவார்கள்" என இராஜாஜி கூறுவதென்ருல் கல்கியின் சங்கீத ஞானத்தைப்பற்றி எழுதுவதற்கு நான் யார் ?

தமிழ் நாட்டுக்குரிய கர்நாடக சங்கீதத்தைத் தமிழ் மொழிமூலம் வளர்க்கவேண்டுமென வற்புறுத்தி இராஜா ஸர். அண்ணுமலைச் செட்டியாருக்கும், இரசிகமணி டி. கே. சி.க்கும் பக்கபலமாக நின்று தமது பேனுமூலம் அற்புதங் களைச் சாதித்தார்.

'ஆயுரம் ஆண்டுகளுக்கு முன்பு அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலிய நாயன்மார்கள் கையாண்ட அற்புத இசைக்கலைதான் காவேரி தீரத்திலும் பொருனைநதிக் கரையிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து, தற்போதைய உந்நதநிலையை அடைந்திருக்கிறது.

'எனவே, தமிழ் நாட்டுக்குரிய சங்கீதக் கலையைத் தமிழ் மொழியின்மூலமாக வளர்க்க வேண்டும் என்றும், தமிழ் நாட்டில் நடக்கும் கச்சேரிகளில் தமிழ்ப் பாட்டுகளை அதிகமாகக் கையாளவேண்டும் என்றும் சொல்வோரின் கட்சி மிகவும் நியாயமானதாகும். அத்தகைய நியாயமான இயக்கத்தை எதிர்ப்பதும், அப்படி எதிர்க்கும்போது தமிழ் மொழியையே குறைவுபடுத்திப் பேசுவதும் மிகப் பெருந்தவறு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை' யென 'சங்கீத யோகம்' என்ற நூலிற் 'கர்நாடகம்' கல்கி எழுதியிருக்கின்ருர்.

கலகியின் எழுத்துக்கள் எத்தனையோ கலைஞர்களுக்கு வாழ்க்கையிற் புதிய உற்சாகத்தை யூட்டி அவர்களைக் கலையுலகிற் சக்கரவர்த்திகளாக மிளிரச் செய்துள்ளன. இவ்வாண்டு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைப் பரிசினைப்பெற்றுள்ள திருவாவடுதுறை திரு. இராசரத்தினம் பிள்ளை அவர்களுக்கு இருந்தாற் போலிருந்து வாழ்க்கையில் மிகுந்த கசப்பு ஏற்பட்டது. இதனை அறிந்த கல்கி நாதசுர சக்கரவர்த்தி அவர்களின் இசைத் திறனை வியந்து ஒரு சங்கீத கோபுரத்தையே தமது எழுத்துக்களாற் கட்டி எழுப்பி யிருந்தார். அத்துடன் அவருடைய படத்தையும் கல்கி இதழ் ஒன்றின் முகப்பில் அழகுற வெளியிட்டிருந்தார் படத்தைப் பார்த்துவிட்டுக் கல்கி தம்மைப்பற்றி எழுதியவற்றைப் பலமுறை படித்த திரு. இராசரத்தினம் பிள்ளை அதிற் சங்கதிகளும் உருப்படிகளும் இருப்பதை உணர்ந்து உற்சாகமேலீட்டினுல் அகில உலக நாதசுவர சக்கரவர்த்தி

யாக இன்று ஒளி பெற்று மிளிர்கின்றூர் என்றுல் கல்கியின் இசைப்பணியைப்பற்றிக் கூறவும் வேண்டுமா ? தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்காக அவர் எவ்வளவு துணிகரமாகப் பணியாற்றினுரோ அவ்வாறே காந்தீயக் கொள்கைகளையும் பாரதியின் பாடல்களையும் உலகெங்கும் பரப்பினுர். பாரதிக்கு மணி மண்டபம் கட்டித் தமது நினைவையும் நிலை நாட்டினுர். வ. உ. சி. நினைவுக்காக நிதி சேர்த்தார். கடைசி யாகக் காந்தி மண்டப நிதிக்காகச் சலியாது உழைத்தார்.

* * *

திரைப்பட உலகிற்குக் கல்கி செய்துள்ள சேவையை யும் தமிழ் மக்கள் மறப்பதற்கில்லை. அத்துடன் அவர் தீட்டிய திரைப்பட விமர்சனங்களையும் படாதிபர்களும் இரசிகர் களும் மறந்துவிடவும் மாட்டார்கள். நந்தனுராகத் திருமதி சுந்தராம்பாள் வெள்ளித்திரையிலே தோன்றிக் கல்கியின் பேனு முனைக்கு ஆளானதும் பின்னர் ஒளவையாராகத் தோன்றியபோது கல்கி சக்கைப் போடு போட்டதும் மறக்க முடியாத காரியங்கள். கல்கி தமது பேனுவின் சக்தியைக் கணிப்பதற்கு நந்தனுர் திரைப்படம் நல்ல சாதனமாயிற்று.

"......ஆனந்த விகடனில் ஒரு பெயர்பெற்ற தமிழ் டாக்கியைப்பற்றி எழுதியபோது, ஆடு, எருமை, தென்னை மரம் இவை நன்றுய் நடித்ததாகப் படம் போட்டிருந்தது" எனக் கல்கி 'தியாகபூமி' திரைப்பட விமர்சனங்களுக்குப் பதில் எழுதியபோது குறிப்பிட்டிருக்கின்றுர். பெயர் பெற்ற அத்தமிழ் டாக்கி ' நந்தனுர் ' என்றே எண்ணுகின்றேன்.

' தியாகபூமி ' திரைப்படம் கல்கிக்கு ஒரு புதிய அனுப வத்தைக் கொடுத்தது. படத்தைப் பார்த்துவிட்டுச் சென்னைப் பத்திரிகைகள் (இரண்டொரு பத்திரிகையைத் தவிர) அத்தனையும் 'பெரிய ஏமாற்றம்,' ' மகாமோசம் ',

'சகிக்க முடியவில்லை' என வெளுத்து வாங்கிவிட்டன! குறித்த விமர்சனங்களுக்கு எல்லாம் கல்கி தாம் ஆசிரியராக விருந்த 'ஆனந்த விகடன்' வாயிலாக மறுமொழி கொடுத்த மையே ஒரு புதுமையாகும். 'தியாகபூமி—கதையும் டாக்கியும்' என்ற கட்டுரைத் தொடரை கல்கி அபிமானிகள் அந்தக் காலத்தில் ஆவலுடன் வாசித்தனர். கடைசிக் கட்டுரையை அவர் பின்வருமாறு முடித்திருந்தார்:

"இனிமேல் தமிழ் நாட்டில் தோன்றப் போகும் தமிழ் டாக்கிகள் 'தியாகபூமி'யைத்தான் பின்பற்றப் போகின்றன. அவை மேலும் மேலும் உயர்தரமாகி வரப்போகின்றன. ஆகவே, நமது விமர்சகர்களும் நாளடைவில் உயர்தர டாக்கிகளை அநுபவிக்கக் கற்றுக்கொள்வார்கள்.

"வருங்காலத்தில் 'தியாக பூமி'யை விட மேலான உயர்தர தமிழ் டாக்கிகள் தமிழ் நாட்டில் அநேகம் வெளிவர வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன். அவற்றைப் பார்த்து மகிழ்வதற்கு நான் ஆவலுடன் காத்துக்கொண் டிருக்கிறேன்.

"ஆனால் இம்மாதிரி உயர்தர தமிழ் டாக்கிகள் வரு வதற்கு வழிகாட்டிய பெருமை என்றென்றைக்கும் 'தியாக பூமி'க்கே உரியதென்பதில் சந்தேகமில்லை."

'ஔவையார்' போன்ற தமிழ்ப்படங்கள் பேரானந்தம் ஊட்டியதைக் கண்டு கல்கி தெய்வத்தமிழ் நாட்டை எண் ணிப் பெருமை யடைந்திருப்பார். 'ஔவையார்' படத்தைப் பார்த்து விமர்சனம் எழுதுவதற்காகக் கல்கிக்கெனத் தனி யாக வாசன் அவர்கள் ஜெமினி நிலையத்தில் அதனைத் திரையிட்டுள்ளார் என்றால், கல்கியின் அபிப்பிராயத்துக்கு எவ்வளவு மதிப்புக் கொடுக்கப்படுகிறதென்பது புலனாகும்.

சாதாரண வாழ்க்கையிலிருந்து தமது சலியா உழைப் பாலும் திறமையாலும் இலக்கிய உலகில் நிலையான இடம்

பெற்றவர் கல்கி. சென்ற ஐந்து ஆண்டுகளாகச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்து வந்தவர் கல்கி.

இந்தியாவின் எல்லா மொழிகளிலும் பெயர்க்கப்பட வேண்டுமென்று இலக்கியக் கழகத்தினர் தெரிவித்த பன்னிரண்டு தமிழ்ச் சிறுகதைகளிற் கல்கியின் 'விஷமந்திரம்' ஒன்று. பாரத தேசீய இலக்கியக் கழகத்தின் உறுப்பினராகக் கல்கியும் விளங்கினாரயின் அதற்கு அவருடைய எழுத்து வன்மையே காரணமாகும்.

கல்கியின் எழுத்து வளம் கொந்தவிழ்மலர்ச் சோலையாகவும், செந்தமிழ்ச் செண்டாகவும், அலையோசையாகவும் கள்வனின் காதலியாகவும், பூங்குளத்துத் தெய்வலோகமாகவும் கவிதைக் கதம்பமாகவும் நெஞ்சில் நிறைந்து கிடக்கின்றன.

"ரோஜாப்பூவாம், ரோஜாப் பூ! பிரமாத அதிசயந் தான்!" என்று சொல்லுவதுபோல் குளத்தின் கரையில் அடர்ந்து வளர்ந்திருக்கும் அலரிச் செடிகளிலே அலரிப் புஷ்பங்கள் மண்டிக்கிடக்கின்றன. செண்டு கட்டுகிறார்களே, செண்டு! இயற்கைத் தேவி கட்டியிருக்கும் இந்த அற்புதப் பூச்செண்டுகளைப் பாருங்கள்! கரும் பச்சை இலைகளுக்கிடையே கொத்துக் கொத்தாகப் பூத்திருக்கும் அந்தச் செவ்வலரிப் பூக்களின் அழகை என்னவென்று சொல்வது? ஆஹா! அந்தப் பூங்கொத்தின் மேலே இதோ ஒரு பச்சைக் கிளி வந்து உட்காருகிறது. கிளியும், இந்த இயற்கைப் பூச்செண்டும் சேர்ந்து ஊசலாடுகின்றன. ஏதோ தெய்வலோகம் என்று உயர்வாய்ச் சொல்லுகிறார்களே! அந்தத் தெய்வ லோகத்தில் இதைவிடச் சிறந்த சௌந்தரியக் காட்சி இருக்கமுடியுமா?" இது கல்கி தரும் சௌந்தரிய இரசானுபவத்தில் ஓர் இனிய காட்சி. இவ்வாறு பூலோகத்திலே தெய்வலோகக் காட்சிகளைச் சொற்சித்திரங்களாக எழுதக் கல்கி பிறந்தார்.

"ஐயா! நான் சிநேக தர்மத்தில் நம்பிக்கை கொண்டவன். யாருடனாவது பழகிவிட்டால், அவராக என்னைவிட்டுப் போனாலன்றி நானாக அவரை விடுவதில்லை. —'கல்கி'

# கல்கியும் நானும்

நிறைமதி பால் நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. அடையாறு காந்தி நகரிலுள்ள மாளிகை ஒன்றின் மேல் மாடியில் இருந்த எனக்கு அக்காட்சி குளிர்ச்சியையும் சாந்தியையும் ஊட்டிற்று. வெண்ணிலாவும் வெண்ணிற மாடி வீடுகளும் இரவையே பகலாக்கிவிட்டன. கவிஞன் ஒருவன் மனோகரமான இம் மாயாலோகக் காட்சியைக் கண்டால், காந்திநகர் பாற்கடலிற் பள்ளி கொள்வதாகக் கற்பனைசெய்து அருமையான கவிதைகளையே பொழிந் திருப்பான். அப்படிப் பாடுவதற்கு நான் கவியாகப் பிறக்க வில்லையே!

பால்நிலவு பொழிவதால் இவ்விடம் பாலாறாகிவிடப் போவதில்லை. அடையாறேதான் என்று என்னுள்ளே சொல்லிக்கொண்டிருக்கையில் வீட்டின் தலைவர் படிகள் மீது ஏறி மெதுவாக வந்து கொண்டிருந்தார்.

"வந்த காரியங்கள் எப்படியிருக்கின்றன? தமிழ் எழுத்தாளர் மாகாநாட்டுக்குத் தாங்கள் வந்ததே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்தத் தொந்தத்தை வளர்த்துவருவதில் தமிழ் நாட்டு எழுத்தாளருக்குத் தாங்கள் ஒரு முன்மாதிரி. பேஷ்!" என்று சொல்லிக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தார்.

கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1954 ஆம் ஆண்டு பெப்ரவரி முதற்கிழமையில் ஒருநாள் இரவு தமது மாடி வீட்டில் இருந்து இப்படிப் பேசலானுர் பூரண சந்திரன் அன்று கலையுடன் பொலிந்து விளங்கியது போலவே அவருடைய முகமும் களையுடன் பொலிவுற்றிருந்தது. தகப்பனுர் அறைக்குள் வந்ததும் அவருடைய குமாரன் சிரஞ்சீவி இராஜேந்திரன் கீழே இறங்கிச் சென்று விட்டார்.

"தாங்கள் நாளைக்கு யாழ்ப்பாணம் போவதைத்தள்ளி வைக்கவேண்டும். அன்பர்கள் பலருக்கு அழைப்பு அனுப்பவிருக்கின்றேன். எங்களுடன் இங்கு விருந்து சாப்பிட்டுவிட்டு அடுத்தநாள் விமானத்திலேயே பறந்து சென்று விடலாம். வந்த காரியம் தான் வெற்றியாகிவிட்டதே. அதற்காக ஒரு விருந்து வைபவத்தையே ஏற்படுத்த விருக்கிறேன்" எனத் தமக்குரிய சிரிப்புடன் இனிமையாகச் சொன்னுர், அன்புக்கும் மதிப்புக்குமுரிய கல்கி ஆசிரியர்.

கனிவும் நயமும் மிக்க இச்சந்திப்புக்குப் பின்னர் நாங்கள் இருவரும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற் சென்ற வருடம் ஏப்ரல் மாதத்திற் கண்டு மகாநாடு கொண்டாடினேம். ஆம். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அகில உலக எழுத்தாளர் மகா நாட்டைப்பற்றித் தான் குறிப்பிடுகின்றேன். அம் மகாநாட்டின் போது நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் கூட்டத்துக்குக் கல்கி ஆசிரியரே

தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் என்னைச் சில வார்த்தைகள் பேச வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். அன்று அவர் என்னைச் சபையினருக்கு அறிமுகப்படுத்திய போது 'நான் அப்படியொரு பெரிய எழுத்தாளன் தானோ' என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. பின்னர் அதே மேடையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழாராய்ச் சித்துறைத் தலைவர் டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் என்னைப்பற்றிக் குறிப்பிட்டபோது கல்கி ஆசிரியர் கூறியதில் ஏதோ உண்மை இருக்கத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

பலவகையிலும் எனக்கு ஆதரவளித்துப் புதிய பல துறைகளில் உதவிசெய்யத் திட்டமிட்டிருந்த கல்கி ஆசிரியர் என்போன்ற கொடுத்து வைக்காதவர்களை எழுத்துத் தொழிலை நடத்திப்பாருங்கள் என்று சொல்லிவிட்டுத் தமது எழுத்துக்கள் மூலம் எம்முடன் இன்று கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றார். அந்த மட்டில் நாங்கள் அனைவரும் கொடுத்துவைத்தவர்களே.

1941ஆம் ஆண்டிலேதான் நான் ஓர் எழுத்தாளனாகக் கல்கி ஆசிரியருக்கு முன் காட்சியளித்தேன். அப்போது சென்னையிற் கல்கி காரியாலயத்திற் பேசிக்கொண்டிருக்கையில் அவரிடம் கேட்ட ஒரு கேள்விக்கு அவர் கூறிய பதில் இன்றும் எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

"பத்திரிகைத் தொழிலைப்பற்றி தங்கள் கருத்தென்ன?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"பத்திரிகைத் தொழிலைப்பற்றி நான் செல்வதற்கு என்ன இருக்கிறது? 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸி. ஆர். ஸ்ரீனிவாசன் அவர்களுக்குத் தான் பத்திரிகைத் தொழிலில் நல்ல அனுபவம் இருக்கின்றது" என அவர் மறுமொழி கூறிவிட்டார்.

இன்று அதே 'சுதேசமித்திரன்' ஆசிரியரான ஸ்ரீனிவாசன் அவர்கள் கல்கி ஞாபக நிதியை ஆரம்பித்திருப்பது மிகவும் பொருத்தமானது. சுதேசமித்திரன் பண்ணையில் வளர்ந்த பாரதிக்கு மணிமண்டபம் கட்டினார் கல்கி. அதே கல்கிக்கு நினைவுநிதி ஏற்படுத்தும் பாக்கியம் சுதேசமித்திரன் ஸ்ரீனிவாசனைப் போய்ச் சேர்ந்துவிட்டது. கல்கி நினைவு நிதி கணப்பொழுதிற் பதினாயிரம் இருபதினாயிரமாக வளர்ந்து வருவதைக் கண்டு தமிழ் உலகமே மகிழ்ச்சியில் வாசகர்களைத் திளைக்கச் செய்யாமல் அவர்களை மீண்டும் என்னுடன் அழைத்துச் செல்லவிரும்புகிறேன். கல்கி ஆசிரியரை நான் 1941 இல் சென்னையில் சந்தித்த காலம் வேறு. இன்றைய காலம் வேறு. இன்று கல்கி ஆசிரியரைப் போற்றிப் புகழாதவர்களே இல்லை. அன்று அவர் எழுத்தாளர்களுடன் நெருங்கிப் பழகாமல் ஐம்பதினாயிரம் அறுபதினாயிரம் என்று சொல்லக்கூடிய வாசகர்களுடன் உறவு பூண்டிருந்தார். கோயமுத்தூரில் ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் 1944 இல் நடைபெற்ற மாபெரும் எழுத்தாளர் மகாநாட்டுக்கே அவர் சமுகமளியாது தமது காரியாலத்திலிருந்த 'சாவியை அனுப்பி வைத்திருந்தார்' என்றால் பாருங்களேன்!

கோயமுத்தூரில் 'கோபால் பாக்' எனும் திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் மாளிகையில் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர் மகாநாட்டைப் போன்ற ஓர் எழுத்தாளர் மகாநாடு தமிழ்நாட்டில் இனி எப்போதாவது நடைபெறுமா என்பது இருந்து பார்க்க வேண்டிய ஒரு காரியம்.

கோவை மகாநாட்டை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நான் அன்பர்களுடன் சென்னைக்குப் புறப்பட்டேன். அங்கு கல்கி ஆசிரியரைச் சந்திப்பதற்காகப் பிரபல எழுத்தாளரான திரு. க. நா. சுப்பிரமணியம் அவர்

களுடன் சென்றிருந்தேன். திரு. சுப்பிரமணியம் அவர்கள் எனது பெயரைத் தெரிவித்தபோது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னை நினைவில் வைத்திருக்கவில்லை. நேரில் வந்து கண்டபின்னர் தான் 'ஈழகேசரி'யின் தொடர்பு அவரது உள்ளத்தில் உதித்தது. அப்போது அவர் பாரதி நினைவு நிதியைக் கல்கியில் ஆரம்பித்துப் பெரிய அற்புத மொன்றைச் செய்த காலம். எனவே, என்னுடனும் அதே காரியத்தைப்பற்றிப் பேசி 'ஈழகேசரி'யும் இத்துறையில் உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். இதனை நான் எனது ஆசிரியரான காலஞ்சென்ற திரு. பொன்னையா அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்கள் மிக உற்சாகமாக இந்த யோசனையை ஏற்று 'ஈழகேசரி' மூலம் பாரதி நினைவு நிதிக்குத் தாராளமாகப் பணம் சேகரித்து அனுப்பியிருந்தார் கள். இதைப் பாராட்டி கல்கி ஆசிரியர் அவர்களும் இரசிக மணி டி. கே. ஸி. அவர்களும் எனது ஆசிரியர் பொன்னையா அவர்களுக்கு இனிய கடித மெழுதியது மன்றி 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆந் திகதி காலை எட்டைய புரத்தில் நடைபெற்ற பாரதியார் ஞாபகார்த்த மண்டப அத்திவார விழாவுக்குச் சமுகமளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்வாறு நாளடைவில் ஏற்பட்ட பல தொடர்புகள் கல்கி ஆசிரியருக்கும் எனக்கு மிடையே நட்புரிமையை வளர்த்து வந்ததுமன்றி 'ஈழகேசரி'க்கும் கல்கிக்கு மிடையே பெற்ற தாய்க்கும் பிள்ளைக்குமுள்ள பரிவையும் உண்டாக்கி விட்டது.

என்ன ? சில காரியங்களை நான் செய்வதற்குத் தமது உத்தரவுதானும் வேண்டியதில்லை என்றுகூட அவர் கருதி யிருந்தார். 'பொன்னியின் செல்வன்' கதையில் வரும் ஓர் அழகிய பகுதியைத் தொகுப்பு நூலொன்றில் வெளியிட

விரும்பி அதற்கு அனுமதி தருமாறு அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு அவர் எழுதிய மறுமொழியை இங்கு அப்படியே தர விரும்புகிறேன். கல்கி ஆசிரியர் எனக்கு எழுதிய கடிதம் வருமாறு:—

அடையாறு, சென்னை.

27—2—51

பிரியமுள்ள திரு. இராஜ அரியரத்தினம் அவர்களுக்கு.

நமஸ்காரம்.

தங்கள் கடிதங்கிடைத்தது. ஸ்ரீ பொன்னையா அவர்களுக்குச் சுகவீனம் அப்படியே இருக்கிறது என்று வருத்தப்படுகிறேன். அவர்களுக்கு விரைவில் உடம்பு குணமாகித் தமிழ் விழாவில் சிறப்பாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

'பொன்னியின் செல்வன்' கதையில் வரும் பகுதியைத் தாங்கள் அவசியம் தங்கள் வெளியீட்டில் சேர்த்துக்கொள்ளலாம். இதற்கு என்னைக் கேட்க வேண்டியதே இல்லை.

தமிழ் விழா முயற்சிகளைப்பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி'

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவுக்கு இவ்வளவு விரைவாக வாசகர்களை அழைத்துக் கொண்டுவந்து விட்டேன். உண்மையாகவே இது எனது குற்றமல்ல. கல்கி ஆசிரியரே இதற்குப் பாத்திரராவர். இதற்கு இடையிலும் இதற்கு முன்னரும் நடைபெற்ற காரியங்கள் எவ்வளவோ உள.

அழியாப் புகழ் பெற்ற தமிழ் மன்னர்கள் மாபெரும் படைகளுடன் கப்பல் ஏறிக் கடல் கடந்து வந்து ஈழநாட்டில் இறங்கி யிருக்கக்கூடிய கடலோரப் பகுதிகளைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் எனக்குச் சிலகாலமாக இருந்து வந்தது.

—கல்கி

# கல்கியும் நானும் - 2

'தமிழ் மணங் கமழவேண்டும்' என்று மணிரங்கு ராகத்தில் கீர்த்தனம் பாடுகின்றார்களே, உண்மையில் தமிழுக்கு என்று ஒரு தனி மணம் உண்டா என்று கேட்டால், கட்டாயம் உண்டு என்று நான் தயங்காது சொல்வேன். தமிழ் மணம் என்பது புகையிலைச் சுருட்டைப் புகைக்கும்போது உண்டாகும் மணமாகவே இருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்களோடு பழக நேர்ந்தவர்கள் யாரும் இதை எளிதிற் கண்டுகொள்வார்களெனக் கல்கி ஆசிரியர் ஒரு சமயம் இலங்கையைப்பற்றி எழுதும் போது நகைச்சுவையுடன் ஓர் உண்மையைக் குறிப்பிட்டுள்ளார். இப்படி எழுதுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொழும்புத்தமிழ்ச் சங்கம் 1950 ஆம் ஆண்டிற் கல்கி ஆசிரியருக்கு

அளித்தது. அச்சங்கத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்குவதற்காக அவர்கள் கலைக் களஞ்சியம் ஆசிரியர் அன்பர் பெ. தூரன் அவர்களுடன் கொழும்பு நகருக்கு வந்திருந்தார்கள்.

1950 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடைபெற விருந்த கொழும்புத் தமிழ்ச் சங்கவிழா கல்கி ஆசிரியரின் சுகவீனங்காரணமாக ஆகஸ்ட் மாதத்துக்கெனப் பின் போடப்பட்டது. கல்கி ஆசிரியர் தமிழ் மழை பொழியவிருக் கின்றூர் என்பதை அறிந்து போலும் ஜூன் மாதத்திற் கொழும்பிலே பெருமழை பெய்தது. தொய்வுநோய் பதினைந்து வருடங்களுக்கு மேலாகக் கல்கி ஆசிரியருடன் தொடர்பு கொண்டிருந்தபடியால் சினேக தர்மத்தில் நம் பிக்கை பூண்ட அன்பர் கல்கி அந்நோய் தன்னை விட்டுப் பிரிந்தாலன்றித் தானுக அதை விட்டுப் பிரிவதில்லை யெனச் சங்கற்பம் செய்திருந்தார்போலும்! ஆகவேதான் கடு மழைக்குள் அன்புத் திருவாளர் 'ஆஸ்துமா' அவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டுவந்து கொழும்பில் இடர்ப் பட விரும்பவில்லை.

கல்கி ஆசிரியர் அவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துக்கு வருகிறூர் என்பதையறிந்து கொழும்பிலுள்ள சில தமிழ் அன்பர்கள் பேரிடர்ப்பட்டனர்.

இலங்கையிலுள்ள தமிழ் அறிஞர்களைத் தமிழ்நாடு கண்ணியப் படுத்துவதில்லை. ஆனல் தமிழ் நாட்டிலிருந்து வரும் அறிஞர்களையும் கலைஞர்களையும் இலங்கை மக்கள் வரவேற்று உபசரித்துக் கௌரவிக்கின்றனர் என்பதே அவர்களுக்குப் பெரிய வயிற்றெரிச்சலாக விருந்தது. இவர் களுக்கு உற்சாக மூட்டித் தட்டிக்கொடுக்கும் வகையிற் கொழும்பிலுள்ள ஒரு தமிழ்த் தினசரியும் அவர்களின் வாலை உருவிவிட்டு வேடிக்கை பார்த்ததுமன்றி, யாழ்ப்

பாணத்திற் கல்கி ஆசிரியரின் முயற்சியில் 1951 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாபெருந் தமிழ் விழாவுக்கும் குந்தகம் விளேக்க முயன்றது. ஈற்றில் படுதோல்வி யடைந்தது மன்றித் தாய்நாடாகிய தமிழ் நாட்டிலிருந்து வரும் தக்க மனிதர்களேயும் கலேஞர்களேயும் மதிக்க வேண்டுமென்பதையும் பின்னர் தெரிந்து திருந்தி நடந்துகொண்டது. கொழும்புத் தமிழ்ச் சங்க விழாவின் போது (1950) ஒத்துழைக்காத அத் தமிழ்த் தினசரி, விழா நடந்த மறுநாள் அவ்விழா நிகழ்ச்சிகளேக் கொட்டை எழுத்துக்களிற் பிரசுரித்துப் பிரமாதப் படுத்தியது. இதனே நேரிற் கண்ட கல்கி ஆசிரியர் "இதிலிருந்து ஒன்று நிச்சயமாயிற்று. இலங்கையிலுள்ள தமிழர்கள் அரசியல் முதலிய துறைகளில் எவ்வளவு மாறுபட்டிருந்தாலும் தமிழ் மொழியைப் போற்றுவதில் அனேவரும் ஒன்றுபடுவார்கள் என்பதுதான்" எனத் தமது கட்டுரை ஒன்றில் எழுதியிருப்பதை இங்கு குறிப்பிடாதிருக்க முடியவில்லே.

கொழும்புத் தமிழ்ச் சங்க விழா 1950 ஆு ஜூன் மாதம் 17 ஆம் திகதி நடைபெறுமற் பின் போடப்பட்டதைக் குறித்துக் கல்கி ஆசிரியர் எனக்கு எழுதியிருந்த கடிதம் இது:

காந்தி நகர்
அடையாறு, சென்னே
14—6—50

அன்பார்ந்த ஸ்ரீ இராஜ அரியரத்தினம் அவர்களுக்கு:–

நமஸ்காரம்

எனது உடல் நிலேமை காரணமாகவும் கொழும்பில் பெருமழை பெய்வது காரணமாகவும் தமிழ்ச் சங்க

ஆண்டுவிழாவை ஆகஸ்ட் மாதத்துக்குத் தள்ளி வைத்திருக்கிறார்கள். ஆகஸ்ட் மாதத்தில் அங்கு வரும் போது தங்களை அவசியம் சந்திக்க விரும்புகிறேன். அச்சமயம் யாழ்ப்பாணத்தில் இரண்டு தினங்கள் தங்குவதும் சாத்தியமாகலாம்.

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி

கடிதத்திற் குறிப்பிட்ட வாறே கல்கி ஆசிரியர் 1950 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்புத் தமிழ்ச் சங்க விழாவை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து அமைச்சர் திரு. நடேசபிள்ளை அவர்களினதும் திரு மதி நடேசபிள்ளை அவர்களினதும் விருந்தினராகத் தங்கி யிருந்தார். அந்நாட்களிற்றான் யாழ்ப்பாணத்துக் கரையோரப் பகுதிகளுக்கு என்னுடனும் திரு. ச. பேரின்பநாயகன், திரு. ச. அம்பிகைபாகன் ஆகிய தமது நண்பர்களுடனும் சென்று 'பொன்னியின் செல்வன்' கதை எழுதுவதற்கான சில சரித்திர சம்பந்தமான விபரங்களை அறிந்து சென்றார். சென்னை சென்றபின்னர் இக் கடிதங்களை எழுதியிருந்தார்.

1

காந்திநகர்

அடையாறு, சென்னை

28-8-50

அன்பார்ந்த இராஜ அரியரத்தினம் அவர்களுக்கு :

யாழ்ப்பாணம் வந்திருந்தபோது நிகழ்ந்த வைபவங் கள் எல்லாம் இன்றும் அப்படியே மனக்கண்முன் நிற்கின்றன. தாங்கள் எங்களுடன் முழுதும் இருந்து நட்புரிமை காட்டி உதவி செய்து வந்ததை என்றும்

மறக்க முடியாது...யாழ்ப்பாண நிகழ்ச்சிகளைப் பற்றித் தாங்கள் எழுதி அனுப்ப முடியுமா?

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி

## 2

சென்னை

30–8–50

அன்பார்ந்த அரியரத்தினம் அவர்களுக்கு:

நமஸ்காரம்

இந்த வாரத்து 'ஈழகேசரி' வந்தது. எங்களைப் பற்றி அபாரமாக எழுதி வெளியிட்டிருக்கிறீர்கள். இதற்கெல்லாம் எப்படி நன்றி செலுத்துவது என்று தெரியவில்லை................ஸ்ரீமான் நடேசன் வீட்டில் எடுத்த 'குரூப்' போட்டோவும், மற்றும் நான் கேட்டிருந்த பிரமுகர்களின் படங்களும் அனுப்பிவைக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி

1950 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலே தமது நண்பர்களுடன் ஆலோசித்துத் தமிழ்விழாவை அடுத்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடாத்த வேண்டுமென்ற தமது கருத்தைத் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவைப் போலத் தமிழகத்திலே ஒரு போதுமே இவ்விழா நடந்ததில்லை யென்றால், அதற்குப் பிரசாரப் பேராசிரியராக விளங்கி வெற்றி கண்டவர் கல்கி அவர்களே யாவர்.

கல்கி ஆசிரியர் தமது இலங்கை நண்பர்கள் பலருடன் 'ஈழகேசரி'யின் இலக்கியப் பணிபற்றியும் கலைவளர்ச்சிக்காக இப்பத்திரிகை ஆற்றிவரும் தொண்டைப்பற்றியும் நான் இல்லாத சமயங்களில் மிக ஆர்வத்துடன் பேசுவதுண்டு. சென்னையில் நடைபெற்ற தமிழ் விழாவின் போது இலங்கைப் பிரதிநிதிகளுக்கு கல்கி அதிபர் திரு. டி. சதாசிவம் அவர்களும், அன்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அற்புதமானதொரு விருந்தளித்தனர். சென்னை அமைச்சர்களும் பத்திரிகைப் பிரமுகர்களும் இதிற் கலந்துகொண்டனர். 'இந்தியன் எக்ஸ்பிறெஸ்,' 'தினமணி' ஆகிய பத்திரிகைகளின் அதிபரான திரு. கோயங்கா அவர்களுக்குக் கல்கி ஆசிரியர் என்னை அறிமுகப் படுத்தியபோது இலஙகையிற் செல்வாக்குள்ள பத்திரிகைகளில் ஈழகேசரி குறிப்பிடத்தக்கதென்றும் கல்கியைப் போலவே குறுக்கெழுத்துப் போட்டிகளிலும் வார பலன்களிலும் ஈழகேசரி வாசகர்களின் மூளைகளைக் குழப்பியடிப்பதில்லை யெனவும் சிரித்துச் சிரித்துச் சொன்னார். இதைக்கேட்டுக் கோயங்கா என்னை உச்சி தொடக்கம் உள்ளங்கால்வரை பார்த்த காட்சி இன்றும் என் மனக்கண்முன் நிற்கின்றது.

ஈழகேசரியுடன் நட்புரிமைகொண்ட கல்கி ஆசிரியர், கல்கிப் பத்திரிகையில் எனது எழுத்துக்கள் வெளிவருவதையும். விரும்பினர். கல்கியில் இலங்கைக் கடிதம் ஆரம்பிக்க முன்னர் அக்கடிதங்களை நான் எழுதமுடியுமோ எனக் கேட்டுப் பின்வரும் கடிதத்தை எழுதியிருந்தார்.

கீழ்ப்பாக்கம்,
சென்னை, 30-4-48.

அன்புமிக்க நண்பரவர்களுக்கு :

இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு அங்குள்ள

அரசியல் நிலைமைபற்றியும், முக்கிய அரசியல் பிரமுகர் களைப்பற்றியும் ஒரு சில கட்டுரைகள் தாங்கள் எழுதக் கூடுமா? 'கல்கி'யில் வெளியிடுவதற்குத்தான். நடு நிலைமையில் நின்று எழுதவேண்டும். தங்களுக்குச் சௌகரியப் படாவிட்டால் வேறு யாராவது ஒரு தக்க மனிதரைக் குறிப்பிடக் கோருகிறேன்.

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி

* * *

இக் கடிதத்தைப் படித்தபோது நான் சிறிதளவு பெருமை யடைந்தேனுயினும் கல்கி ஆசிரியரின் விருப்பத் துக்கு இணங்க முடியவில்லை. எனது அரசியல் கொள்கை கள் இலங்கையிலுள்ள கல்கி வாசகர்களுக்குத் திருப்தியாக இருக்கமாட்டா வென்பதை நான் உணர்ந்திருந்தேன் அன்பர் குறிப்பிட்டவாறு நடு நிலைமையின் நின்று எழுது வதற்கு நான் தயாராக இருந்தேனுயினும் எனது நடு நிலைமை கல்கி அபிமானிகளுக்கு அவ்வளவாகப் பிடிக்க மாட்டாதென்பதை நான் அறிந்தேன். ஆகவே, கொழும்புப் பத்திரிகையிற் பணியாற்றுகின்ற 'தக்க மனிதர்' ஒருவரின் பெயரை அன்பர் கல்கி அவர்களுக்கு எழுதியிருந்தேன். அதே அன்பர்தான் 'ரஜனி' என்ற பெயரில் இன்றும் கல்கியின் இலங்கைக் கடிதங்களைத் திறம்பட எழுதி வருகின்ருர்.

"ஒரே தொழிலைச் சேர்ந்தவர்கள் நாலுபேர் ஓரிடத்திற் கூடினால் தங்கள் தொழிலைப் பற்றிப் பேசுவது இயற்கையேயாகும்...பத்திரிகையாளர் கள் சிலர் ஓரிடத்திற் கூடினால் அந்தந்தப் பத்திரிகைகளின் 'சர்குலேஷன்' என்ன, யார் அதிகப் பொய் சொல்லுகிறார்கள் என்பனபற்றி விவாதிப்பார்கள்."
—கல்கி

# கல்கியும் நானும் - 3

"இந்தக் கட்டுரைகளுக்கு மங்களம் பாடவேண்டிய கட்டம் நெருங்கிவிட்டது. இவை உலகெங்கும் பெருங்கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றன." இவ்வாறு கல்கி ஆசிரியர் தமது பிரயாண அனுபவங்களைப்பற்றி எழுதிய கடைசிக் கட்டுரை ஒன்றில் ஆரம்பித்துள்ளார். நானும் கல்கியின் எழுத்துக்களுடனேயே அவர் புகழ்பாடுங் கட்டுரைகளை ஆரம்பித்தேன். இன்று எனது கட்டுரை களுக்கும் மங்களம் பாடவேண்டிய கட்டம் நெருங்கிவிட்ட படியாற் கல்கி ஆசிரியரின் எழுத்துக்களுடனேயே நானும் மங்களம் பாட விரும்புகிறேன்.

ஆனால் பேராசிரியர் கல்கி எழுதியிருப்பதுபோல இவை உலகெங்கும் பெருங்கிளர்ச்சியை உண்டாக்கியிருக்

கின்றன என நான் பெருமைகொள்ள முடியாது. என்னைப் பொறுத்தவரையிற் குண்டுச்சட்டிக்குள் குதிரைவிட்டிருக் கின்றேன் என்று கூறித்தான் திருப்தியடைய முடியும்.

கல்கியின் கட்டுரைகளை வாராவாரம் இரண்டரை இலட்சம் வாசகர்கள்வரை வாசித்து மகிழ்ந்ததுண்டு. எனது கட்டுரைகளைப் பத்தாயிரம் பேர்வரை வாசிப்பார் களோ என்பது சந்தேகம்.

'பாரதி பிறந்தார்' என்ற கட்டுரையை எழுதிய கல்கி அதன் மூலம் போதும் போதுமென நாற்பதினாயிரம் ரூபாய்க்குமேற் பாரதி நிதிக்குப் பணம் சேர்த்துக் கொடுத் தார். நான் 'கல்கி பிறந்தார்' என எழுதியபோது கல்கிக்கு நிதி சேர்க்கும் எண்ணமேயிருக்கவில்லை. ஆகவே போதும் போதும் எனப் பணம் வந்து சேருமென எதிர்பாக்கவு மில்லை. ஆனால் எனது எழுத்துக்களைப் படித்தவர்கள் 'போதும் போதும், இனி நிறுத்தும்' எனக் கூறியிருப்பார் களாயின் அது எனக்கு ஆச்சரியம் விளைந்திருக்கமாட்டாது.

இதற்கு விதிவிலக்காகக் கல்கியுடன் நெருங்கிப்பழகிய நண்பர்கள் பலர் எனது கட்டுரைகளை ஈழகேசரியிற் படிக் கும்போது கல்கி இல்லையே என்ற எண்ணமேயின்றி அவர் எங்களுடன் வாழ்ந்துகொண்டே இருக்கிறார் என்ற எண்ணமே மேலோங்கி நிற்பதாகக் கடிதங்கள் எழுதியிருந் தனர். இதனை உற்சாக மூட்டுங் கடிதங்களாகவே நான் கருதுகின்றேன்.

இத்தகைய உற்சாகந்தான் ஓர் எழுத்தாளனுக்கு அவசியம் வேண்டப்படுவது. இதுவே அவனை மேலும் மேலும் முன்னேறச் செய்கின்றது.

கல்கி ஆசிரியரும் எனது எழுத்துக்களைப் படித்து அவ் வப்போது உற்சாக மூட்டிவந்தார். 'ஈழகேசரி'யின் சிறப்புக்

களைத் தமிழகத்துக்கு எடுத்துரைத்தார். சொந்தமாகப் பத்திரிகை ஆரம்பித்தாலன்றி வேறு எக்காரணத்துக் காகவும் 'ஈழகேசரி'யை விட்டு விலகக்கூடா தெனத் தமது இலங்கை நண்பர்களை வைத்துக்கொண்டு புத்திமதி கூறினர். "பத்திரிகைத் தொழிலிற் கஷ்ட மேற்பட்டால் எனக்கு எழுதுங்கள். தங்களுக்காகவே கல்கியில் 'யாழ்ப் பாணக் கடிதம் என்ற ஒரு புதிய பகுதியை ஆரம்பித்து விடுகின்றேன்" எனத் தைரிய மூட்டுவார். இன்று இவற்றையெல்லாம் எண்ணும்போது 'ஈழகேசரி'யைத் தமிழருக்கெனத் தினபத்திரிகையாக நடாத்தவேண்டு மெனக் கனவுகண்ட எனது ஆசிரியர் திரு. நா. பொன்னையா அவர்களின் தன்னலமற்ற தமிழ்த்தொண்டு நினைவுக்கு வருகின்றது. எனக்காகவே கல்கியில் யாழ்ப்பாணக் கடிதத்தை ஆரம்பிக்கத் தயார் எனக்கூறி இன்முகங் காட்டிய அன்பர் கல்கி அவர்களின் உறுதிமொழிகள் காலத் திரையைக் கடந்து எனது காதில் ஒலித்துக்கொண்டிருக் கின்றன. இவற்றினும் மேலாக 'ஈழகேசரி'யின் அன்னை யார் திருமதி பொன்னையா அவர்கள் "தம்பி! அவர் இல் லாத காலத்திலும் தமிழர்களுக்காக 'ஈழகேசரி' தொடர்ந்து நடைபெற வேண்டும். அதுவே அவரின் ஆசையுமாகும். 'ஈழகேசரி'யைவிட்டுப் பிரிந்து போகவேண்டாம்" என்று கூறிய வார்த்தைகள் என்னை 'ஈழகேசரி'யுடனே இறுகப் பிணைத்து விட்டன. இதனால் பெருஞ் செலவு, பிரயாசை களுடன் நடாத்தப்பட்டுவரும் தமிழரின் சொந்தப்பத்திரிகை யான 'ஈழகேசரி' தனது வெள்ளிவிழாவையுங் கண்டு களிக்க விருக்கின்றது. எனவே ஆசிரியர் ஒருவர் என்னை ஈழகேசரிப் பொன்னையாவின் 'கலைப்புத்திரன்' என ஒரு விழாவுக்கு நான் தலைமை தாங்கியபோது கூறியதை நினைந்து உவகையடைகின்றேன். ஈழகேசரிப் பொன்னையா நினைவு வாழ்க!

கல்கி அவர்கள் ஈழகேசரிப் பொன்னையா அவர்களின் மதிப்புக்குரிய நண்பராவர். திரு. பொன்னையா அவர்களின் பெரும் பிரிவு குறித்துக் கல்கியில் அவர் எழுதியவற்றை இங்கு குறிப்பிடத் தவறுவேனாயின் நான் எனது கடமையி னின்றும் திரும்பியவனாவேன்.

"அவரைப் போல் யார்?" என்ற தலைப்பில் கல்கி ஆசிரியர் தமது பத்திரிகையில் எழுதியிருப்பதாவது :

யாழ்ப்பாணம் "ஈழகேசரி" பத்திராதிபர் ஸ்ரீ பொன்னையா அவர்கள் காலமான செய்தி அறிந்து பெரிதும் துயரடைகிறோம். அரசியல் துறையிலும் சமூக வாழ்க்கையிலும் இலங்கைத் தமிழர்களுக்கு "ஈழகேசரி" தலைசிறந்த தொண்டு புரிந்து வருகிறது. ஈழநாட்டின் புதுமை எழுத்தாளர்கள் பலர் "ஈழகேசரி"யின் மூலம் தமிழை வளர்த்து வருகிறார்கள். இத்தகைய ஒரு பத்திரிகையை நிறுவி வளர்த்து வலிமை பொருந்திய ஸ்தாபனமாக்கியவர் ஸ்ரீ பொன்னையா அவர்கள். அவருடைய அச்சகத்தின் மூலமாகத் தமிழ் மொழிக்கு அவர் செய்துவந்த திருப்பணி போற்றற்குரியது. பல பழந்தமிழ் இலக்கிய நூல்களை அவர் நல்ல முறையில் திருத்தமாக அச்சிட்டுப் பதிப்பித்து வந்தார். தாய் நாட்டிலிருந்து ஈழநாடு செல்லும் தமிழன்பர்களும் தமிழறிஞர்களும் 'ஈழகேசரி' காரியாலயத்தைத் தேடிச் சென்று ஸ்ரீ பொன்னையாவைச் சந்தித்துப் பேசிவிட்டு வருவது வழக்கம். அத்தகையவர் காலமானபடியினால் "ஈழநாடு" இன்று களையிழந்திருக்கிறது. ஸ்ரீ பொன்னையாவின் ஸ்தானத்தில் இருந்து தொண்டுபுரிய அவரைப்போல் யார் உளர் என்ற ஏக்கம் அவரை அறிந்தவர் எல்லாருடைய உள்ளத்திலும் உண்டாவது இயல்பு. ஸ்ரீ பொன்னையா அவர்

களின் குடும்பத்தாருக்கும், ''ஈழகேசரி'' துணை ஆசிரியர் ஸ்ரீ இராஜ அரியரத்தினம் அவர்களுக்கும், ஈழ நாட்டுற் தமிழன்பர்களுக்கும் நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—கல்கி, 15–4–51

'ஈழகேசரி'யின் சேவைகளைப் பாராட்டி வந்த கல்கி ஆசிரியர் இலங்கைத் தமிழர்களுக்கெனச் சொந்தமான தமிழ்த் தினசரியொன்றின் அவசியத்தை உணர்ந்திருந்தார். 'ஈழகேசரிதான்' இந்தக் குறையை என்றோ ஒரு நாள் நீக்க வேண்டுமெனவும் ஆசைப்பட்டார்.

இலங்கைத் தமிழருக்கெனச் சொந்தமான தமிழ்த் தினசரியில்லாத குறைபற்றியும் தமிழ் நாட்டிலுள்ள எத்தனையோ பத்திரிகைகள் (ஆபாசப் பத்திரிகைகள் உட்பட) இங்கு விலையாகும்போது ஒரு நல்ல தமிழ்த் தினசரிதானும் இலங்கைத் தமிழருக்குச் சொந்தமாக இல்லையே எனவும் காரசாரமான கட்டுரை ஒன்று 1953 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 'ஈழகேசரி'யில் வெளியாயிற்று. இக்கட்டுரையைப் படித்துவிட்டு அன்பர் கல்கி அவர்கள் நீண்ட கடிதம் ஒன்றினை எனக்கு எழுதியிருந்தார்கள். யாழ்ப்பாணத் தமிழ் விழாவில் நாதஸ்வர வெள்ளத்தை வாரிவழங்கிய வித்துவான் குளிக்கரைப் பிச்சையப்பா அவர்களைப்பற்றிக் குறிப்பிடும்போது பிச்சைக்காரக் குளியப்பா என நகைச்சுவையாகக் கல்கி ஆசிரியர் தெய்வதரிசனம் என்ற தமது கட்டுரையில் எழுதியிருப்பதாக நினைவு. அதேமாதிரி எனது பெயரிலும் ஒரு 'குழப்பம்' உண்டாக்கி அவர் எழுதிய கடிதத்தை இதோ படியுங்கள்.

காந்திநகர்

அடையாறு, சென்னை

29–10–53

அன்பார்ந்த திரு. அரிய ராஜரத்தினம் அவர்களுக்கு,

நமஸ்காரம்

மேலே எழுதியுள்ள தங்கள் பெயரில் சிறிது குழப்பம் நேர்ந்திருக்கிறது. அதைப் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

இத்துடன் திரு. வி. க. மணிமண்டப நிதி வேண்டு கோள் அனுப்பியிருக்கிறேன். அதற்குத் தக்கபடி விமர் சனம் செய்து உதவக் கோருகின்றேன்.

"ஈழகேசரி சென்ற இதழில் இலங்கைத் தமிழர் களுக்கென்று நடத்தப்படும் தினசரி இல்லாத குறை யைப்பற்றிக் கட்டுரை வெளியாகியிருக்கிறது. அதில் அடங்கியுள்ள கருத்துக்களை வற்புறுத்தி நானே தங்களிடம் நேரிற் பேசியிருக்கிறேன். ஆனால் தமிழ் நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகள் இலங்கையில் அதிகம் செலவாவது குறித்து இவ்வளவு கோபம் காட்டியிருக்க வேண்டியதில்லை! தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை படிக் கும் ஆர்வத்தையும் வழக்கத்தையும் வளர்த்து வருவது குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். இவ்வாறு தமிழ்ப் பத்திரிகைகள் செய்யும் தொண்டு, யாழ்ப்பாணத் தமிழர்கள் தினசரிப் பத்திரிகை ஆரம் பித்து நடத்துவதற்கு உதவியே தவிர எவ்விதத்திலும் இடைஞ்சல் இல்லை. பத்திரிகை படிக்கும் வழக்கம் பரவினால், அது பத்திரிகைத் துறையில் எடுக்கப்படும் எல்லா நன்முயற்சிகளுக்கும் உதவியாகவே இருக்கும்.

இங்ஙனம்

ரா. கிருஷ்ணமூர்த்தி

இக்கடிதத்தைப் படிக்கும் போது நல்ல பத்திரிகைகள் நாட்டிற் பல்கிப் பெருகவேண்டு மென்ற எண்ணம் கல்கியின் உள்ளத்திற் குடிகொண்டிருந்ததை வாசகர்கள் உணர்வார்கள் என்று நம்புகின்றேன்.

கல்கி ஆசிரியர் பத்திரிகைக்காரர்களின் உரிமைகளை நன்கு மதித்து எழுதி வந்தார். சமூகத்தில் எழுத்தாள ருக்கும் கலைஞர்களுக்கும் அவர்களுக் குரித்தான கௌரவம் கிடைக்க வேண்டுமென உழைத்து வந்தார். பாரதநாடு அடிமையுற்றிருந்த காலத்தில் தேசீயத் தலைவர் களைப்போற்றி அவர்களுக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர், நாடு விடுதலையடைந்த பின்னர் எழுத்தாளர்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும் கலைஞர்களையும் நாடு மதிக்க வேண்டுமென ஆசைகொண்டு அவர்களைப்பற்றி எல்லாம் அவ்வப்போது தக்க முறையிற் கல்கியில் எழுதி வந்தார். 1950 ஆம் ஆண்டிற் கல்கி ஆசிரியர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கவந்த காலை, அவர்களுக்கும் அன்பர் தூரன் அவர்களுக்கும் கொழும்பு மாநகரில் ஒரு விருந்தளித்துக் கௌரவிக்க விரும்பினேன். நான் ஒரு பத்திரிகை ஆசிரியன் என்ற முறையிலேயே இந்த விருந்தினை ஒழுங்கு செய்திருந்தேன். வேறு பென்னம் பெரிய புள்ளிகளும் அமைச்சர் சிலரும் கல்கி அவர்களை விருந்துகளுக்கு அழைத்திருந்தனர். கலாரசிகர் திரு. க. கனகரத்தினம் அவர்களின் விருந்தினை யும் எனது விருந்தினையுமே அவர் ஏற்றிருந்தார். நண்பர் களுடன் ஒரு சமயம் பேசிக்கொண்டிருந்த போது 'பத்திரிகை ஆசிரியர்கள் விருந்துக்கு அழைத்தால் நான் எங்கு செல்லவுந் தயார்; வேறு எந்தப் பிரமுகர்கள் அழைத்தாலும் அதையிட்டுப் பெருமை கொள்வதில்லை' என அவர் கூறியதைக்கேட்டுப் பலர் தாங்களும் பத்திரிகை ஆசிரியராக இருந்தாலோ என்று ஆசைப்பட்டனர்.

இவ்விருந்து வைபவத்தில் 'வீரகேசரி' செய்தி ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் எம்.ஏ., 'தினகரன்' அலுவலகச் சிறப்பு நிருபர்கள், 'சுதந்திரன்' துணை ஆசிரியர் உட்பட இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. ச. அருணந்தி, சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. ஏ. எம். கே. குமாரசுவாமி, திரு பி. ஆர். தேவராசன், சி. சி. எஸ்., இராணி அப்புக்காத்து எஸ். ஜே. வி. செல்வநாயகம், முதலியார் குல சபாநாதன், கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளர் வித்துவான் வ. மு. கனகசுந்தரம் ஆகியோருடன் சில பெண்மணிகளும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இவர்கள் அனைவரையும் கல்கி ஆசிரியர் தனித்தனி கண்டு பேசி அளவளாவிய காட்சி என்னுல் மறக்கமுடியாத தொன்று. அதேபோன்று இவ்வைபவத்தைக் கொழும்புத் தமிழ்த் தினசரி ஒன்றின் ஆசிரியர் புகைப்படம் பிடிப்பித்து அதனை அப்பத்திரிகையில் வெளியிட்ட அழகும் எனது வாழ்க்கையில் மறக்க முடியாததாகும்.

'கல்கி பிறந்தார்' என்ற தலைப்பில் நான் கட்டுரைகள் எழுதுவதற்குக் கல்கி ஆசிரியரின் 'பாரதி பிறந்தார்' என்ற கட்டுரையே தூண்டுகோலாயிற்று. அதேபோன்று,'கம்பரும் நானும்' என அன்பர் கல்கி எழுதியதைப் பின்பற்றியே 'கல்கியும் நானும்' என மகுடமிட்டுள்ளேன்.

இக்கட்டுரைகளைக் கூடியமட்டிற் கல்கியின் நடையைப் பின்பற்றியே எழுத முயன்றுள்ளேன். உழைப்பாலும் சொந்தத் திறமையாலும் உயர்ந்தவர் கல்கி. எழுத்தாளர் தலைவராக விளங்கியவர் கல்கி. இத்தகைய இலக்கிய புருடர் ஒருவரை அன்பராகப் பெற்ற பெருமை எனக்கும் என்போன்ற பலருக்குமுண்டு.

கல்கி ஆசிரியரின் ஆசியைப் பெற்றவர்களில் கல்கி உதவிபாசிரியர் பகீரதன் என்னும் அன்பர் மகாலிங்கமும் ஒருவர். கல்கிப் பத்திரிகை ஆரம்பமான நாளிலிருந்து இவர் அதன் உதவியாசிரியர்களில் ஒருவராகப் பணியாற்றி வருகின்ருர். கல்கி ஆசிரியர் இவருக்கு அன்பும் ஆதரவும் காட்டி ஊக்கமளித்து வந்தார். பல்வேறு மகாநாடுகளி லெல்லாம் பகீரதன் கல்கி அவர்களுடன் கூடிவருவதைக் கண்டிருக்கின்றேன்.

இத்தகைய நல்ல எழுத்தாளரான பகீரதன் அவர் களுக்கு இன்று கல்கி ஆசிரியராக எனது நண்பரும் கவிஞருமான எம். பி. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் கிடைத்திருப்பது இருசாராருக்கும் மகிழ்ச்சிதருவ தொன்ருகும்.

கல்கியின் அதிபராக விளங்கும் திரு டி. சதாசிவம் அவர்கள் கல்கி திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பணியைத் தொடர்ந்து காப்பாற்றி வருவது தமிழரின் அதிர்ஷ்டமேயாகும்.

"மனிதன் உழைப்பினுல் உயர்கிருன்; மனிதன் வீர தீரங்களினுல் உயர்கிருன்; தன்னடக்கத்தினுல் உயர்கிருன்; தன்னலமற்றுச் சமூகத்துக்கும் தேசத்துக்கும் தொண்டு செய்வதனுல் உயர்கிருன்; இடைவிடாத முயற்சியினுல் உயர்கிருன்; தளராத ஊக்கத்தினுல் உயர்கிருன்; தலைவர்க ளிடம் அசைக்கமுடியாத நம்பிக்கை வைப்பதினுல் உயர் கிருன்; அன்பினுல் உயர்கிருன்; ஆண்மையினுல் உயர் கிருன்; பலர் சேர்ந்து செய்யும் கூட்டுறவு முயற்சியினுல் உயர்கிருன்; மலைபோன்ற கஷ்டங்கள் வந்த போதிலும் மனந் தளராமல் மலையிலும் பெரிய பிரயத்தனங்களைச் செய்து அந்தக் கஷ்டங்களை வெற்றிகொள்வதினுல் உயர் கிருன்; சமூகத்துக்காகவும் நாட்டுக்காகவும் உயிரையும்

3357



கொடுக்க முன்வரும் தியாக புத்தியினுல் மனிதன் உயர்கிருன்.''

இவ்வாறெல்லாம் அரிஸ்டோட்டிலோ, காந்திஜியோ அன்றேல் இராஜாஜியோ அறிவுரை பகரவில்லை ; பத்திரிகை ஆசிரியர்களினதும், எழுத்தாளர்களினதும், மக்களினதும் மதிப்புக்குரிய கல்கி ஆசிரியர் அவர்களே எழுதியுள்ளார்கள். இவற்றுக்குத் இலக்கணமாக விளங்கும் கல்கி வாழ்க ! கல்கி பிறந்த தமிழ்நாடு வாழ்க ! கன்னித் தமிழ் வாழ்க !

3357

Eveready Printers, 85-B, Pondy Bazaar, T. Nagar, Madras-17



## கல்கியின் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவகாமியின் சபதம் | 15 | 0 |
| அலை ஓசை | 12 | 8 |
| பார்த்திபன் கனவு | 7 | 8 |
| அபலையின் கண்ணீர் | 1 | 4 |
| சோலைமலை இளவரசி | 3 | 8 |
| பொய்மான் கரடு | 3 | 0 |
| ஏட்டிக்குப் போட்டி | 3 | 0 |
| சாரதையின் தந்திரம் | 3 | 4 |
| அமர வாழ்வு | 2 | 4 |
| மாடத்தேவன் சுனை | 2 | 8 |
| மோகினித் தீவு | 1 | 12 |
| மகுடபதி | 4 | 8 |
| சங்கீத யோகம் | 5 | 0 |
| ஒற்றை ரோஜா | 1 | 12 |
| தேவகியின் கணவன் | 1 | 8 |
| நாட்டுக்கொரு புதல்வர் | 1 | 12 |
| தந்தையர் செய்த விந்தைகள் | 1 | 8 |
| பாரதி பிறந்தார் | 3 | 0 |
| ஜமீன்தார் மகன் | 1 | 8 |
| தாகூர் தரிசனம் | 1 | 8 |
| இலங்கையில் ஒரு வாரம் | 1 | 8 |
| மூன்று மாதக் கடுங்காவல் | 2 | 0 |

பாரதி பதிப்பகம்

தியாகராய நகரம், சென்னை-17.

JACKET PRINTED AT VINODAN PRESS. MADRAS 1.